பரசிவரூபமதாகுஞ் சிவலிங்கந் தனைப்பூசை பண்ணுவோர்நல்
விரைகமழு நந்தவனம் வைத்திடுவோர் கற்புடைய மின்னார் மிக்க
வுரைபெறுவெண் டிருநீறு பூசிடுவோர் சிவாலயங்க ளுஞற்றுகின்றோர்
திரைபெறிவா ரிதியுலகி லெமதடியார் தமைப்பூசை செய்யு மேலோர்.

நின்மலமா மஞ்செழுத்தை யுளத்தழுத்திச் செபித்திடுவோர் நிகரி
ன் மாக, நன்மதிநீ ராடிடுவோர் பஞ்சபா தகந்தவிர்ந்தோர் நாள்க
டோறுந், தன்மதியி லாததற வந்தணருக் காடையன்னஞ் சொன்ன
மீவோர், மன்மதியாற் குளங்கூவல் கல்லுவிப்போர் நிழல்சாலை வழியி
ல் வைப்போர். (௧௮௬)

காசியிரா மேச்சுரம்பொற் கனகசபை யாரூர்தா ளத்தி காஞ்சி
மாசில்கழுக் குன்றமுது குன்றமொற்றி யூர்மருதூர் மதுரை யையா
றுசின்மறைக் காடுவெண்கா டானைக்கா மாயூர மருணை புள்ளூர்
தேசுதருஞ் சிரபுரநற் றிருப்புகலூர் முதற்றலங்கள் செகத்தி லுண்டால்.

அத்தலங்க டமையடைந்து புனிதநீர்ப் படிந்தாடி யமல மாகிச்
சித்தமகிழ்ந் தியாமுறையுஞ் சிவலிங்கத் தெரிசனங்கள் செய்தோர் யாரு
முத்தர்சிவ நிசிவிரத நோற்றவர்மற் றிவரெவர்க்கு முதற்பே ராகு
மித்தகைய ருன்றாதர்க் கெளியரலர் தண்டமிலார்க் கில்லையென்றான்.

கருதியசொற் கேட்டுளத்தி னச்சமுடன் வீழ்ந்திறைஞ்சிக் கால
னைய, தருதிவிட்ட யெனப்பெற்று வைத்திடுமத் திறைதாங்கித் தன்
றூரெய்தி, வருந்தொனத் தூதர்தமை யழைத்தான்செய் மாற்றமெல்
லாம் வகுத்துக் கூறி யொருநிகிரி தனையுருட்டித் தென்புலஞ்சாத் தினி
திருந்தா னுவப்பினோடும். (௧௮௭)

இச்சிவராத் திரிவிரத சரிதைதனைக் கேட்டோர்மற் றின்பாய்க்
கற்றோர், கச்சையுடன் கொங்கைமங்கை பங்கனுறை கயிலையெய்திக்
களிப்ப ரென்றே, யுச்சிதமாய்ச் சூதமுனி மாதவர்கேட் டுள்ளமுற்று
முருகி வாயான், மெச்சிமகிழ்ந் திடவேத வியாதமுனி மொழிப்படி
யே விளம்பினனே. (௧௮௮)

சகுமாரச்சருக்க முற்றிற்று.

அங்குலச்சருக்கம்.

இன்னு மாசியிற் சிவநிசிப் பெருமையொன் றிசைப்பேன்
மின்னு வார்சடைத் துறவிர்கா ளுமக்கென விழைவாற்
றுன்னு நான்மறைப் பொருடெரி வியாதனைத் தொழுது
பின்னு மாதவச் சூதமா முனிவரன் பேசும். (௧)

களங்க மாய்க்குறு முயலுறு கதிர்மதி தவழ
விளங்கு மிஞ்சிசூழ் தளைகமா நகரினை வென்ற
வளங்கொள் சாகர புரத்தயல் வளர்வரை வனத்தி
லுளங்கொ ளோகைபோ லுறைபவன் றோலுடை யுடையோன். (௨)

வெண்ணி ணத்தடி முடைகமழ் வெடிக்குரல் வாயா
னெண்ணில் வேட்டுவக் கிளைஞரோ டின்பமுற் றென்று
நண்ணி வாழ்பவன் காதினி லுலகால் வாயின்
றண்ணீ லாமருப் பரிந்தது குழையெனத் தரிப்போன். (௩)

தேனு நீடணில் வாற்றூற் செந்தினை மாவுங்
கானி னியலுங் கபித்தநற் கனிகளுங் கஞ்சுன்
மானு மேனமான் மரைமுயன் முதலிய மாவி
னூனு மைவனத் துண்டியு முண்டிகொண் டுவப்போன். (௪)

பொங்கு வெஞ்சினத் தழல்விழிப் பொறிப்புலி போல்வான்
கங்கு லஞ்சனக் கிரிமுழக் கொடுமழை காலு
மங்கு லோருருக் கொண்டுவந் தாலென வடிவந்
தங்கு மங்குல னென்றுள னொருதனிச் சவரன். (௫)

பொன்றி கழ்ந்திடு மவ்வரைக் கருகொரு புனத்திற்
குன்றி யின்வடக் குடமுலைக் குழைக்கலை யுடுக்கு
மின்றி ருந்திடைக் கொடிச்சியோர் கொடிச்சியை வேட்டாங்
கன்றி லுஞ்சிறைச் சேவலு மபேடென வணைந்தான். (௬)

கொடிய கோளரிப் பிணவுவெங் குருளையின் றென்னப்
பிடிந டைக்குறப் பேதையங் கொருமகப் பெற்றாள்
கூடிய புல்லுயிர்ச் சுட்டிபோ டைமணிக் கவடி
வடிவு சேர்கரு பகல்வருக் கணிந்துள மகிழ்வான். (௭)

உளாயிந் நீர்மையிற் களிப்புறு மெயினனங் கொருநாள்
வரையி னீண்மரத் தரித்திடும் வற்கலை வாங்கி

யனையி னீர்ந்துமான் றேற்செருப் படிகளிற் றொட்டு
விளையி னீடிருட் குஞ்சிமென் கயிற்றினால் விசித்து. (௮)

தூக்கும் வெஞ்சரத் தூணிதன் *வெரிநிடைத் தூக்கித்
தாக்கின் றேலுறைச் சுரிகைசேர்த் தஞ்சன சயிலத்
தூக்குந் தோளில்வார் விற்றரித் துயர்சுவா வினங்கொண்
டிரக்க மச்சமொன் றில்லவன் வேட்டமே லெழுந்தான். (௯)

இலவு தேக்ககி லிரத்திவே லெட்டிபுன் னாகங்
குலவு கூவிளங் கொன்றைபூங் குரவசோ கிரப்
பலவு பாடலம் வன்னிசண் பகம்பட ரழிஞ்சி
னிலவு பாலைபைந் தாதுபொன் னிறத்தநீள் வேங்கை. (௧0)

விரித டஞ்சினைச் சந்தனம் பொரியரை வெள்ளில்
பெரிய வாகைபிப் பிலம்பிசு மந்தமுட் பிடவங்
கரிய காதிரங் கழையிருண் மதுமலர்க் கடம்பம்
வரிகொ ளார்பதஞ் செறிதரு மராமரம் வருளம். (௧௧)

மரவ நாகநல் வழைமுதன் மரங்களா னெருங்கி
யிரவ லாற்பக லில்லையாங் கிலங்குமா யிருஞ்செங்
கரவ ரோதயன் கதிரொளி புகுந்திடாக் கறங்கு
மரவ மாருதம் புகுந்திடா வனத்திலங் கடைந்தான். (௧௨)

புட்ட ருக்குலந் தொறுப்பயில் பொங்கிருட் புனத்திற்
கட்ட முற்பொறிக் கூருகிர்க் கவிழ்தலை யுளிய
மட்ட றச்சித லெடுத்துயர் பாழிவன் மீகந்
தொட்ட கழ்ந்தநிந் சோறுக ளருந்துமங் கொருபால். (௧௩)

துறும யிர்ச்செறி மடிசெவித் துடிக்குரற் செந்நாய்
தெறுசி னத்துடன் சிலீமுகஞ் செல்கதி யினிற்சென்
றுறுசெ வித்துணை நிமிர்த்துகள் குமிழிநே ரொண்கட்
குறுமு யற்சிறு குருளையைத் தூர்த்திடு மொருபால். (௧௪)

வளைந்த வாலுளை மடங்கல்கைம் மாவின்மத் தகத்தைப்
பிளந்து கோடுகள் பிடுங்கியே கறித்திடத் தெறித்து
விளங்கு நித்திலஞ் சோரியிற் றுவண்டதால் விரிமா
துளஞ் செழுங்கனி விளையெனத் துளங்குமங் கொருபால். (௧௫)

இடிமு கிற்குரற் றழைசெவித் துணைமருப் பேய்ந்த
கடிசி னப்புழைக் கரக்கட கவுட்பெருங் களிறு

துழிய் டிக்கய முனிகள்பின் றொடர்ந்திடத் துன்னும்
பிடிநதிப்புனல் படிந்துடன் பிளிறுமங் கொருபால். (கசு)

முன்முழக்கட் டெஞ்சிடு கொடுவெரிப் புலியின முழங்கி
யுழைத்த பேரொலி கேட்டுவல் லுளிமனை வரையா
டிழைத்த காரிரும் பென்னவே நீண்டகோட் டிரலை
யுழைக்கு லம்பயந் தொதுங்கியே யொடுங்குமங் கொருபால். (கஎ)

நீடு வேற்காக் குமரவே ணெடியமா குலங்க
ளூடு வைத்தபல் லாயிரஞ் சுடர்விளக் கொப்பப்
பாடு சேர்படம் விரித்துயிர்ப் பெறிந்துநற் படிமின்
றூடு நாகநன் மணியிடந் தவிருமங் கொருபால். (கஅ)

வேறு.

இத்திறு நிகழும் வனத்திலவ் வேட னிருஞ்சிறைப் புட்குலம் படுக்குங்
குத்திரக் கண்ணி பற்பல வூன்றிக் குலவுமா வினங்கொலை புரிவான்
புத்தியி னிபற்று மியந்திரப் பொறிகள் புடவியிற் புதைத்துய ரடவிப்
பத்திர மரத்தி னடிகளிற் றொடுத்துப் பலவலை வளைவுறப் பூட்டி. (க௯)

• மடிசெவி வளைவான் ஞாளிக ளொடியி வாளிக ரொர்துபின் குறிய, தடிகளி னெறிந்து கற்றிர ளிருத்துந் தட்டைகள் சுற்றியே விசிச், செடிவளர் வனத்தில் விலங்குகள் கலங்கச் செய்தவன் றூரத்தலும் வலையி, னடிகளிற் பிணிக்கப் புதைத்திடும் பொறியி லகப்பட. தகன்றவங் கலைந்தும். (உ0)

புன்புல வருந்துந் தந்தவாய் திறந்து பொதும்பரிற் புகுந்தமா வினங்கள், மென்சிறைப் பறவைக் குலமெலா மருள விளித்தவை போலநின் றழைக்கும், துன்புட் னுழையின் கவையடி மிதித்த சுவடுகண் டந்நெறி தொடரு, மென்செய் கேளினியென் றங்கைகள் வாங்கி விடும்புகு மூடும்பு கேடற்கே. (உக)

வார்சிலை வணக்கி விடுத்திடும் வயிர வாளியான் ஞாளியால் வயக்கும், கோரவெங் குந்தப் படையினுற் றிரண்ட கொடுங்கடுங் கதையினுற் குணிலா, லேர்பெறும் பெருங்கன் வலையினுற் புதைத்த வியந்திரப் பொறியினு லெதிர்ந்தவ், கோர்விலங் கோர்புட் கொன்றிடக் கிடையா துள்ளூறு கவலையுற் றுடைந்தான். (உஉ)

இன்னணம் வேட்டத் தலைந்தவன்மேனி யிளைத்திடத் தழைத்த கட்டெழுந்து. துன்னருமுதரத் தழல்சுட மெலிந்து சோகமோ டி

ருந்தபின் ப்ரமன், பன்னரு மரவீ தென்றநிந் தவன்போற் பதங்க ஞேர் பதங்கொடேர் கடவி, மன்னெடுங் கயிலை மலைவலங் கொள்வா ன் பச்சிம திசையதின் மறைந்தான். (௨௩)

கொய்யுளைப் பரியேழ் கொளுவுமோ ராழிக் கொடிஞ்சியந் தேரொடு குடபால், வெய்யவன் கற்றைக் கதிர்க்கரஞ் சுருக்கி விரிதிரைப் புணரிவீழ்ந் திடலுஞ், செய்யகோ லோச்சி யுலகினி தளிக்குந் திறன்மிகு மரசர்போ யொதுங்க, வையமா ளுதற்குக் குறுநில வேந்து வந்தபோல் வந்ததான் மாலை. (௨௪)

ஓருருட் டேரோன் குடதிசைக் கடலி லொளித்துறக் குளித்ததற் பின்னர், வாருறு வரிவிற் றடக்கையங் குலன்றன் வடிவுதன் ககற்றி வெந் தீமை, கூருறு மவன்றன் செய்கைகுத் திரங்கள் குடிகொளு முள மும்போற் கருகிப், பேருல கனைத்தும் விழுங்கிமா திரம்வின் புதைத்த து காரிருட் பிழம்பே. (௨௫)

குனிசிலைச் சவரர் குலத்தினி லுதித்துக் கொடுங்கொலை புரிந்தவ ங் குலனுந், தனியிருந் தாண்டு மீண்டியா மெய்தச் சரிதெரி யாதிவண் டரிக்கி, லினிய வூணின்றி மனைவியுஞ் சிறுவ ரிருவரும் பசிப்பரென் றிரங்கித், துனியுற லொழிந்து தெளிந்துளந் தேறிச் சொல்லருஞ் சூழ்ச் சியொன் றுணர்ந்தான். (௨௬)

பாவியேன் வாளா வெறுங்கையோ டெய்திற் பயனிலை பனியிருட் பொழுதில், வாவிக ளருவிக் குளிர்புனல் பருக வருமிரு கங்களுக் கயி லம், பேவியே வதைத்துத் தடிகொடு போத லியல்பென மதித்துட னெழுந்து, தூவியஞ் சிறைப்புட் குலம்பயின் றிடுமோர் சூழியின் கரை க்கணுற் றனனே. (௨௭)

முறுகிய சினக்கோ ளரிவயப் புலிவெம் மும்மதக் கடமால் யானை, குறுகு மென்றஞ்சிப் பாழிநீர்ச் சூழிக் கோட்டுறு கூவிளங் கோட்டி, லு றுவ னென்றேறிச் சுரிகையான் மறைக்கு முலவைக ளரிந்தரித் தொது க்கி, மறுகிய மனத்தா னேனமான் மரைகள் வருமென வரவுபார்த் தி ருந்தான். (௨௮)

வடிசெய்து வருத்த வைதிக சைவ வழிமொழி வழாமன் மந்திரத் தாற், படியின் முற்பகலோர் முனிவரன் பூசை பண்ணிய தெண்ணிய படியே, கடியவெந் தொழிற்செய் கிராதனுங் காணான் கவடுவிட் டுயரு மா லூரத், தடியினுக் கருகிற் புராதன லிலிங்க மமர்ந்தினி திருந்ததொ ன் றன்றே. (௨௯)

அன்றர ளிரவென் றறிந்திலன் றெடுக்கு மம்பிடைத் தபெச்சுமென் றமிழ்ந்து, தன்றடங் கையா லெறிந்தபைந் தழையுந் தனியிருந் திடிற்று யில் விருமே, யென்றது விலக்கி யிருட்பொழு தகற்றற் கெண்ணினன் கொய்துவிட் டெறிந்த, மென்றழை முழுதும் பழுதிலவ் விலிங்க வியன்முடி மீதுவீழ்ந் ததுவே. (௧௦)

குறந்துளித் திவலைப் பனிகனி மூழ்கிக் கொடும்பசிக் கருந்திடா தொழிந்தா, னுறங்குயி றறந்து புராரிசங் கிதியி னாதின்மா னூரவெண் டழையாற், றெறுந்தழ னுதற்கட் சிவநிசியதனிற் சிவார்ச்சனை புரிந் துவெந் தீமை, யறுந்தவ முடையோ ரொத்தனன் வேடன் கொடிச்சி தன் றிறமினி யறைவாம். (௧௧)

வேறு.

உன்ன ரும்பெருங் காட்டினில் வேட்டமே லுற்றுவ்
வன்ன் வார்கிலே வலவனென் னுயிர்த்துணை மகிழ்ந
னின்னு மெய்தில னென்கொலோ வெனமனத் தெண்ணி
யன்ன மென்னடைக் குறத்திகண் டுயின்றிடா தாற்றும். (௧௨)

தஞ்ச மொன்றிலன் றமியனுச் சென்றனன் றகைசா
லஞ்ச னக்கிரி யாமென வுருத்தெதி ரடர்த்து
மஞ்சே னப்பொழி மதசலப் பதத்துணை மருப்புக்
குஞ்ச ரக்குலங் கொன்றதோ வென்றுளங் குலையும். (௧௩)

கரிய நீண்மயிர்க் கூருகிர்க் கவிழ்தலைக் கரடி
சரியில் வந்துயிர் கவர்ந்ததோ வென்னமெய் தளரு
முரிய வெஞ்சினக் கொடுவரி கறுத்தொறுத் தடலைப்
பெரிய வாயினிற் பெய்தது கொல்லெனப் பிதற்றும். (௧௪)

அளையு றும்பணி விடங்கலுழ்ந் துமிழ்ந்திடு மகல்வாய்த்
துளையெ யிற்றினே றுண்டதோ வோவெனச் சோருங்
கிளையு டன்றிரி கரிவழிப் பகையதாங் கோள்வா
லுளைம டங்கலா லுயிருலந் தனன்கொலென் றுன்னும். (௧௫)

காட்ட மன்னநின் புதல்வர்வெம் பசியினு ளலிந்து
கோட்ட முற்றனர் கொழுந்தசை கோற்கொளீஇ வெதுப்பி
யூட்ட வந்திலை யுன்றனக் குரிசையா மெனது
வாட்ட நோக்கிலை யென்கொல்செய் தாயென மயங்கும். (௧௬)

என்றி ருந்தருந் துயருழந் திடைக்கொடிக் கொடிச்சி
குன்றி பின்வடங் கிடந்தொளிர் கொங்கைகள் குளிப்ப

வென்றி யங்கீதிர் வேல்விழி நீருகுத் திடும்பை
யன்றி யொன்றில ளயர்ந்தன ளிருந்திடு மமையம். (௩௭)

பரவி யந்தணர் வந்தனை புரிந்துமுன் பழிச்ச
விரவி யம்புயம் பொற்கதிர்க் கரங்களால் விரித்துப்
புரவி யேழ்நுகம் பூட்டிய பொற்றடந் தேரு
ரிரவி யுங்குண புலத்துய ரிரவியி லெழுந்தான். (௩௮)

புலவு வாய்கம ழுங்குலன் றினந்தொறும் புரிந்த
வலகில் பாவவல் லிருள்களைந் தாரந்தகற் றுதலா
னிலவு நீறணி நீள்புரி சடைச்சிவ னிசியு
முலவி னீடருட் கடிபகற் கதிருமொத் துளதால். (௩௯)

மேவி னங்கதிர் விரிந்திட விடிந்ததன் பின்னர்
வாவி ளஞ்சிறு மான்விழி யெயிற்றிதன் மைந்த
ராவி மூந்தகன் றுவவொன் றங்குல னினைந்து
கூவி னம்பனை நின்றிழிந் தனன்வழிக் கொண்டான். (௪௦)

ஈறி லாத்துய ருற்றிடு மெயிற்றிதன் னிதயந்
தேறி வேடனைத் தேடுவா னடந்துறு செப்பத்
தூறி லான்வால் கண்டெதிர்ந் தோகையிற் றழுவி
மாறி லாதுயர் புற்குடின் மேவினர் வந்தார். (௪௧)

வந்து செந்தினை மாவுடன் வம்பமர் வனைத்தேன்
முந்து புற்பத மேவுமீ வாயவெவ்வ ரூர
வந்து நற்றசை நறவுக ளூடொறு நாடித்
தந்து மற்றவ ளோடுபன் றூனவன் சார்ந்தான். (௪௨)

மருந்தி யற்றரும் பற்கழன் றிடானை முதிர்ந்திட்
டருந்து தற்கரி தாயுடல் பலங்கெடு மங்காட்
பெருந்தி னைக்கடற் கடுவுறழ் பெரும்பிணி பிணிக்க
வருந்தி மற்றவன் சடந்துறந் திறந்தனன் மன்றோ. (௪௩)

வேறு.

சூலமொடு வாள்சிலை தோமர முலக்கை
பாலமயில் வேல்விசிறு பாசமவை கொண்டே
வாலமதி போலெயி றிலங்கவட வைத்தீ
யாலகிகர் தூதுவர்க ளவ்வயி னடைந்தார். (௪௪)

பற்றினர் புயத்துணைகள் பாசமத னாலே
சுற்றின ரடித்தனர் துடித்திட விடித்துக்
குற்றினரு டற்சவி குறைத்தவச மேன்மே
லுற்றிட வுதைத்துவழி யொல்லைபட லொல்லை. (௪௫)

மங்கையொரு பங்கன்மழு மான்மறி மரைப்பூஞ்
செங்கையி லிருத்திறை சிலாதரன் மகற்கூய்ச்
சங்கைபெறு மங்குல னெனுஞ்சவ னனோத்தம்
மங்கைகொள் கயிற்றினிடை யார்த்தியம தூதர். (௪௬)

சென்றனர் விலக்கியொளிர் செம்பொனணி தேர்மே
வின்றவனை யேற்றியொ ரிமைப்பினிவ னெய்தக்
குன்றனி புயத்துவலி குன்றமரு வாளை
வென்றகண நாதனை விடுத்திடுதி யென்றான். (௪௭)

நாதன்விடை கொண்டுகண நாதனை யழைத்தே
யேதமறு மங்குலனை யின்றுகொடு போநீ
தூதர்தமை வென்றவிரை விற்படர் விமான
மீதினி லிருத்தியிவண் மேவுவிடு கென்றான். (௪௮)

நந்திமொழி கொண்டுகண நாதர்கள் விரைந்து
வந்தியம தூதரை வருத்திவலி செய்தே
முந்தியவன் மொய்ம்புகள் முரிக்கவிசி பாசஞ்
சிந்திமணி மொய்த்தொளிர்கொ டேரின்மிசை வைத்தார். (௪௯)

யாவர்பணி கொண்டிடவ னெதிர்ந்திது புரிந்தீர்
போவதிவ னெங்கணமொர் புண்ணிய மிலனாதான்
மேவவுவ னுமினி விடோமென வெகுண்டு
காவல்புரி காலபடர் காய்ந்தெதிர் கதித்தார். (௫0)

உங்கடலை வன்றனை தூரத்திடை யுதைத்தோ
னெங்கடலை வன்பணியி தென்றுமுச லத்தாற்
செங்கடலை நேர்குருதி சிந்தவெம தூதர்
தங்கடலை மோதினர் தரித்தில ரகன்றார். (௫௧)

வென்றிதரு வானவர் விரைத்தருவி னற்பூப்
பொன்றிகழ் செழுந்துணர் பொழிந்தனர்கள் வாழ்த்த
வன்றியர மங்கையர்க ளங்கிரு மருங்கு
நின்றிணைகொள் வெண்கவரி நேசமொடு வீச. (௫௨)

விண்டல முதிக்குமதி வெண்குடை நிழற்றப்
பண்டரு மிசைப்பனுவல் கந்தருவர் பாடக்
கொண்டலிடி யொத்ததிர் குரற்குட முழாநற்
றொண்டகம தோடமர துந்துபி முழங்க. (௫௩)

போயமலன் முன்புக விடுத்தபொழு தெம்பா
லேயகணா மாயிவ ணிருந்திடுதி யென்றே
நேயமிக வைத்தெழில்கொ ணெற்றிவிழி யுற்ற
நாயக னுழைத்துவர நல்கின னயந்தே. (௫௪)

செங்கணெயி னன்கயிலை சேர்கண்ம தாகி
யங்கணமர் வுற்றபி னருந்துடர்கொ தேர்
திங்கண்முடி யானடியர் செய்ததிற மெல்லாம்
வெங்கண்மற லிக்குமுன் விளம்பவினை வுற்றார். (௫௫)

பாசமெறி தாரைதொடர் பாறுபடி சூலம்
வீசுசுடர் வேன்முசல மின்னுகதை கன்று
ராசமுட னங்குசம தங்கையிரு நான்கிற்
றேசுற வுரத்தினிடை செந்தொடை விளங்க. (௫௬)

எற்றிய கடற்றிரை யிருத்திய தெனக்கார்
முற்றிநெளி வுற்றபுரு வத்துணை முரிப்பும்
பெற்றிடி யெனக்குரல் பிறங்குபில வாயும்
பற்றிய தழற்குநிகர் பங்கியும் விளங்க. (௫௭)

வாதகப பித்தமுத லானபிணி மற்று
மேதமிகு சொற்பணி யியற்றியய னிற்பப்
பாதகர் வெருக்கொடு பதைத்திட வருத்துந்
தூதரிரு பக்கமுறை சுற்றினர்கள் சூழ. (௫௮)

சாலமொழி மாதர்பல் சாமரை யிரட்ட
வாலமதி யாமென வளைந்தெயி றிலங்க
நீலவரை போனிதி நெடுந்தவி சிருக்குங்
காலனிரு காலிலிவர் கைதொழுது வீழ்ந்தே. (௫௯)

மூடனை யறத்திற முயன்றறித லில்லா
வேடனை வடத்தினிடை வீக்கிவரு காலைப்
பாடனை வருக்குமிது பண்ணினவ ரொற்றைக்
கோடனை யளித்தவர் கணங்கள்கொடு போனார். (௬0)

என்றிவை யுரைத்திட வெயிற்றித முதுக்கித்
தென்றிசை நகர்க்கிறை திரண்டெழ வளர்ந்த
குன்றின்மிகை பெற்றிடு புயத்துணை குலுங்க
நன்றிது வெனத்தனி நகைத்துட னெழுந்தே. (௬௧)

சஞ்சரிக மொய்த்தமுரா ரார்களசை யப்போ
யஞ்சன வரைச்குநிக ராவபக டேறி
விஞ்சிய கணக்கரொடு வீரர்பலர் சூழ
மஞ்சன மிடற்றிறைவன் வாழ்கயிலை வந்தான். (௬௨)

வேறு.

அரியமா தவத்தோ ருள்ளமொத் துயர்ந்தோ ரணுவினுங் களங்கமொன் றின்றிச், சுரியமா முகில்கள் படிதடஞ் சாரற் கயிலையிற் கனகமா மணியா, லரியகான் முகத்து விதிவிதிக் கரிய வொளிதிகழ் கதிர்க்கா யிரமும், விரியுமா தவரோர் கோடிவந் துதித்து விளங்கல் போற்றிளங்குமண் டபத்தின். (௬௩)

ஐம்படை தரித்த தன்னுறாங் துளபத் தண்ணறு மன்முதற் படைத்த, வம்படை கமலத் தவிசுறை யயனும் வரைச்சிறை யறுத்திடும் வசிசம்,பம்படை யெனக்கொள் பாகசா தனனும் பன்னிரண் டருக்கரு மொற்றைக், கொம்படை களிற்று முகப்படைத் தருணங் குடவயிற் றைங்கரக் கோவும். (௬௪)

வார்பெறு கலச முலைக்குறக் கொடியை மணர்தருண் மகிழ்கனற் கடப்பர், தார்பெறு புயத்தோன் றாகன் சினக்கே சரிமுகன் றகுவர்கட் கிறையாஞ், சூர்பெறு வரங்க டொலைத்தவை வேலோன் றொகைமே வொகரமூர்ந் தருள்வோன், சூர்பெறு முட்டாட் செஞ்சிறக் குடுமிக் கோழிசேர் கொடிக்காக் குகனும். (௬௫)

உலகமுற் றெரிக்குங் காலையி லெழுந்த வூழிவெந் தீயென வுருத்துத், திலகமுற் றிடுவா ணுதன்மறைக் கொடிதோள் சேர்ந்திடுஞ் செழுவிதி விதியிற், கலகமுற் றிகலிப் புரிமக மரைக்காற் கணத்தினிற் சிதைத்தவன் பிறைபோ, லிலகவிட் டெறிக்குங் கதிரெயிற் றலைசேய் வெறிடும் வீரபத் திரனும். (௬௬)

புடத்திடு பசும்பொற் குழைகிழித் திடுங்கட் பூரணை புட்கலை தரள, வடக்குட முலைக ளழுந்துமு தழக்கு மார்பினன் மாலென முழங்கி, முடக்கிய தடக்கை நீட்டிமூச் சொடுக்கி முரிதிரைக் கடலெனா

முகந்துள். ளாடக்கியே யுமிழ்வெள் ளானைமே லேறு மரிகர குமர ரொ ளவனும். (௬௭)

வள்ளொளக் குளைக்குங் கரியகா யூரும் வடுகனு மாருநத் தேகு, மள்ளலந் சேற்றுக் கருங்கடற் கிறையு மக்கினிக் கடவுளு மனைக், கெள்ளருந் தலைமை பூண்டபிங் கலனு மிருஞ்சிறைச் சுரும்புபாட் டயர்ந்து, கள்ளருந் திடெந்தார் நிருதியுஞ் சுருதி கருதுமீ சானனென் பவ னும். (௬௮)

மேவரு விரிவெண் டிரைக்கட லேழும் விலங்கலின் குலங்க ளோ டேழும், பூவருங் கங்கை முதனதி யேழும் பொற்புறு கற்பக நி ழல்வாழ், தேவரு முயர்கும் தருவரு சித்த ரெச்சரு முத்தரா முனிவர், யாவருஞ் செங்கை குவித்தா கரமென் றிருமருங் கினுந்திரண் டேத்த.

பாரதன் மேலா மண்டகோ ளகைபொற் பருப்பதந் திருப்புவும் வல்ல, சாரதக் குழவும் குழிவிழிப் பேழ்வாய்த் தளர்நடைப் பேய்த் திரளுஞ் சார, நாரதன் மகதி யாழ்நரம் புளா நந்திகைப் பிரம்பெடுத் தலைக், காரதன் வடிவு பெறுகுறுங் கூத்த லரம்பையர் கவரிகா லசைப்ப. (௭௦)

கொலைபயி லயனத் தஞ்சன மறவுங் குளிர்மொழி ... குலவு, மலைமகள் வதன முழுமதிக் குடைச்சு வாளெயிற் றரவிறுக் கிடைந்த, சலைவள ராம வுடல்குறைக் தொடங்கிக் கடுக்கைமா லார மார் கவித்த, நிலைபெறு சடைக்காட் டலைநதிக் கயல்வெண் ணிலவு கான் றிளமதி கிடப்ப. (௭௧)

கறங்கிடெ் திரைநீர்க் கங்கையுஞ் சடையிற் கட்செவிக் கடிம ணி மீற, வுறங்கிட் டவிழ்க்கு கரதக நதியா லுரித்துமுன் மருங்குற வு டுத்த, மறங்கிளர் தழற்கட் கொடுவரிப் புலித்தோ லுடையதுங் கிடக் தொடு மருண்மா, னிறங்கிட வெருவிக் குதிதொழுந் தற்ற நோக்கி டங் கிடக்கரத் திருப்ப. (௭௨)

கோல்வளை நிகர்க்கும் வரிநெடுந் தடங்கட் குயிதனத் திரதிதோ டேயர்ந்த, செல்வனை துவசச் சித்தச னெரியத் திறந்தகண் டிருநுதற் றிகழக், கால்வளை யளித்தற் கரிதென விரிந்த கடுநகர் களறும்வித் து ற, பால்வளை மருவி யென்னமுப் புரிநூல் வயங்குமார் பமுறிக வி ளங்க. (௭௩)

தாயசெக் தமிழ்சகுந் தான்றனக் காகத் தூதுபோய்ப் பரவைபா லடைந்து, மேயவன் றிறல்சே ரந்தக னுக விலங்கன்மூன் கலங்கிடவு

ளைதந்தருச், சேயசெங் கமல மென்சிறந் தன்பர் சிந்தையீம் போருக மலராந், காய்கதிர் விரிக்குஞ் செழுமணிச் செம்பொற் கனைகழற் றுணிணை கவினை. (எச)

தம்மையார் கலிரு மூலகினிற் புகலி தோன்றிய கவுணியச் சேய்க்குக், கொம்மைவார் முலையா ரமுதமுத் தமிழுங் குழைத்துமுன் குடித்திடப் பருக்கு, மம்மையோர் பாக மாகமற் றெவர்க்கு மருள்சுரித் திடும்விழி பரப்பி, வெம்மையார் மடங்க லாசனத் தெமையாள் விமலனக் கினிதுவீற் றிருந்தான். (எரு)

முந்தைநாட் கலிவளித் தவ்வியே ரயினீர்த்த மூழ்வது மிலோர்ந்துழீ ன்முடிக்கிட், கிந்தையா விந்த கொத்தமே பூருஞ்சேர் மேழ்த்திசை வாயில்வேராய் நந்தி, மொய்ந்தையே வலிமு லடுக்கிறல் கால னிருகா ளிருசர ணக்தன், சிந்தைகம் பிறந்தோ டெம்பிரா னிருக்குந் திருச்சபை துதிபாய்த் துதிப்பாம். (எசு)

பொக்கர விதழிப் புதுமலர் புனைந்த புரிசடைப் புனிதவம் பூத்தோன், கங்கா கங்கா தரசர வரையும் காம்பிலத் தாக்குமுன் றுரித்த, துங்கா வியனைன் பதியுமுங் கன்றுரைந்த காமனை விடைவனா துவச, சங்கர கமல நிகம்பர வும்பர் தலைவநின் றுணைமலர் போற்றி. (எஎ)

மன்றான்னைக் கூறை மலைமகட் புரை யாருக்குறி யென்றசொன் மாறும, வன்றமை ருக்காள் சென்றுபடற் றுவமெனங் றங்கமே லையக் கினைக் கிறவன், பொன்றபைத் தகக்கட் புலக்கலைய் கொறுத்திப் புன்னகை புரிந்துமுட் புறுமுற், குன்றயிற் சாகக் குன்றயிற் குனித்த குழகநின் குலாகழல் போற்றி. (எஅ)

ஒருமலை யெடுத்த விருந்திற லரக்க னுரீருடைம் கூட்டமுன் றுரன்றிப், பொருமலைச் சலந் கடைந்திடு மன்னாட் புத்தமு தத்துட னுமித்து, வருமலைப் பழித்த சுழற்றிந் மறுளன் மலர்விழிப் போதகனிக் கடியார், கருமலை வகற்றி யின்பவீ டளிக்குங் கனாகழற் றுணைமலர் போற்றி. (எகூ)

வேறு.

ஏணப்பல துதிகள் கூறி யிசனை யிறைஞ்சி யேத்தி
மணப்படு வச்ச நீங்கி வாய்புதைத் தொதுங்கி நின்றங்
கணப்பதி பாகன் றன்னை யவனிமுற் படைக்கச் செய்தாய்
குணப்படு முலகங் காக்கக் கண்ணனைக் கற்பித் தாயே. (அ0)

கண்ணழல் கதுவும் வெள்ளைக் கரடமால் யானை யூரு
மண்ணலைப் புலவர் பொன்னா டளித்திடற் கருளிச் செய்தாய்
தண்ணெனுங் கதிர்கள் வீசுஞ் சந்திரா தித்தர் தம்மை
விண்ணினி லுலவி வையம் விளக்குவீ ரெனவி டுத்தாய். (௮௧)

ஏர்பெறு மளகை தன்னை யிருநிதிக் குபேரற் கீந்தாய்
பார்முத லெங்கும் வீசப் பவனனைப் பணித்தாய் மற்ற
வார்தருஞ் சலதி யாள வருணனை வைத்தாய் தன்மச்
சீர்கெடு மவர்க்குத் தண்டஞ் செய்வதற் கமைத்தா யென்னை. (௮௨)

திரிபுவனத்து நீதான் செய்தகற் பனைக ளெல்லாஞ்
சரிவர நடந்த தின்றுந் தமியனேன் பிழைத்த தில்லை
பரிசடைப் பாம வென்று புரிநெடும் பாசத்தோடு
முரிசெயற் கரிய தண்ட முதலமுத் திரைமுன் வைத்து. (௮௩)

ஆக்குவா னழிக்க வெண்ணி லாது காக்க வல்லார்
நீக்குவா யிதனை மற்றோர் பணிசெய நிறுத்து கென்று
தூக்குநீ டிலைக்கோ லன்னான் சொற்றது கேட்டு நெஞ்சிற
றாக்குமா றின்று வந்த தாழ்வென்சொ லாற்று கென்றான். (௮௪)

கண்ணனிக ளொன்றிக் கையிற் கார்முகங் குனித்தம் பேவி
மண்ணனின்மா வினங்கள் கொன்றும் வாய்த்தபுட் குலங்கண் மாய்த்து
வெண்ணினைத் தடிக டின்று வீக்கிய சடத்தா னென்றோன் [ம்
றுண்ணனிகழ் வில்லா வேடனுன் பதத் துறைத லுற்றான். (௮௫)

பரிமகம் புரிகின் றோனோ பகர்தரு மாக மாதந்
துரியநீர் படிகின் றோனோ வுயர்சிவ லிங்க பூசை
புரிதர நினைகின் றோனோ புண்ணியத் தலத்தி லுன்னைத்
தெரிசனஞ் செய்கின் றோனோ சிவநிசி நோற்கின் றோனோ. (௮௬)

எத்தவம் புரிந்தா னிங்ங னெய்துதற் கிறைவ வுன்றன்
சித்தமே தெரிந்து நீதி திறம்பிடி லறங்க டேயு
முத்தரும் பவங்கள் செய்யு மூர்க்கருஞ் சரியா யெண்ணிற்
றத்தலைக் கடனீர் சூழ்ந்த தாரணி கவிழு மன்றே. (௮௭)

என்னுடைத் தூதர் தம்மை யிகல்புரிந் திவனா லின்றிங்
குன்னுடைக் கணங்கள் செய்த துரைத்திடக் கேட்டி யேட்டி
மின்னுடைப் படையாற் றண்டால் வெட்டியும் புடைத்துஞ் சென்னி
முன்னுடைத் துதிரத் தோடு மூளைகள் சிந்தி னாரே. (௮௮)

தாவரும் பவங்கள் செய்வார் தாஞ்சிவ லோக மேவில்
யாவரைத் தண்டஞ் செய்வ தென்றெதி ரியமன் கூறத்
தேவரு முனிவர் தாமுஞ் சிந்தையிற் றியானஞ் செய்யு
மூவருந் தாளாய் நின்ற மூர்த்தியு மொழிவ தானான். (அகூ)

விற்பயில் வேடன் முன்னாள் வேட்டமே லெழுந்து நந்த
மற்படு காலை புண்டி யனந்தலற் றருகிற் சார்ந்து
பொற்பமர் வில்வஞ் சாத்திப் பூசனை புரித லாலே
சொற்பயில் பாவ வேலை சுவறிடத் தூர்த்திட் டானே. (கூ0)

இத்திற மறியாய் நீயு மெழுதருங் கணக்கில் வல்ல
சித்திர குத்தன் றானுந் தெரிந்ில னென்று திங்கட்
சத்திரன் றன்னைக் காய்ந்த சங்கர னுரைப்பத் தீட்டும்
பத்திர மெடுத்துப் பார்த்துக் கணக்கனும் பரிந்து போற்றி. (கூக)

சிவசிசி யென்ப தோரான் றின்பதற் கூன்கிட் டாம
லுவசி சாகி நின்ற னுவாப்புலி யென்ற சிங்க
மவமெனச் செய்யு மாலென் றஞ்சியவ் வில்வத் தேறித்
தவர்விடுங் கணைக னோவிற் றடைசெயு மிடையி லென்றே. (கூஉ)

கூர்தருஞ் சுரிகை யாலக் குழைகளைக் கொய்து வீழ்த்தா
னீர்தரு கண்க டன்னி னித்திரை வந்தா லிந்தப்
பார்தனில் வீழ்வே னென்று பயந்ததிற் பன்னம் பண்ணி
யோர்தரு மரைமான் பன்றி யின்றிவண் வருமென் றெண்ணி. (கூ௩)

சுசிகர மில்லா வேடன் றுயிலுறந் திருந்தா னீச
னிசியென நினைந்து தொன்னூ னீதியிற் செய்த தின்றென்
றுசிதமாய்க் கணக்க னோத வொண்டமிழ்ச் சுட்டலை தன்னிற்
பசிதமே பூசு மேனிப் பரமனும் பகரும் பின்னும். (கூ௪)

அதையுனக் கறைவங் கேட்டி யறிந்திடா தியற்ற லாலே
சிறைவிலாக் கணத்திற் சேர்ந்தான் சித்திரன் முத்தி நல்கும்
விதைநிகர் கங்கு றன்னில் விதித்தநூல் வழிவ ழாம
லிதையறிந் தறிந்து செய்தா லியாமவ னுவ னன்றே. (கூ௫)

செவ்விர வனைய கூர்தற் சிவைமுத னேற்றல் செய்யு
மிவ்விர தத்தின் மேன்மை யாவரே கணிக்க வல்லார்
கைவிரல் கண்ணிற் பட்டாற் செய்வதென் கவலை நீக்கு
மைவிர வியகார் மேனி மறலிநின் றாத ரோடும். (கூ௬)

வைத்தமுத் திரையை வாங்கி வழிக்கொள்வர் யென்ன ஞான
வித்தகன் கருணை யோடு விடைகொடுத் தருள வேண்டி
முத்தலைப் படைகொள் காலன் முதல்வனை முறையிற் றாழ்ந்து
சித்தமுந் தெளிந்து தேறித் தென்புலத் தெய்தி னானே. (௯௭)

வேறு.

வெங்கொ டுங்கொலை புரிந்த வங்குலனும் வெள்ளி வெற்பிலொ
ரு புள்ளிமான், செங்கை கொண்டருளு மண்ணல் கண்ணரு டினாற்
றொ றும்பெறு கணங்களுக், கங்க ணற்றலைமை பெற்றிருந்தபின்
னைந்து பைந்தரு வளர்தரும், துங்க மூற்றகன கந்தி கழ்ந்திலகு சுரர்க
ள் வாழுலக மேவினான். (௯௮)

ஆட கப்பொனுல கத்தி னீடுகொடி யாடு மாடநிகழ் மாடமேற்.
காட கத்திறுறை வேட னுற்றலர்கொள் கற்ப கத்திணிழ லுற்றடிப்
பாட கத்தொலி பாப்ப ரம்பையர்கள் பலரு நின்றருக் பணிசெய
பாட கத்திவவின் யாழின் விஞ்சையர்கள் வந்து பாடவினி னிவகினான்.

காவி லாதினை மங்கி ருந்துபுக ழளகை மாநகரின் வளமெலாந்
தாள்வி லாதவ னிருந்தி மூந்திமிகு சாடியிற் றயிர்நெய் தேடியே
களவி னுவிடையர் பாடியிற் றிருடு கண்ணன் வண்ணமுறு கன்றினை
விளவின் மீதெறி முகுந்த னங்கரை விந்தன் வாழுலக மேவினான். ()

கொண்டல் வண்ணமுடல் கொண்ட கண்ணனருள் கொண்டு
வைகிடுவை குண்டமீ, தண்டர ண்டினர்செய் தொண்டு கொண்ட
தனி லான போகமவை யாவுமுண், டெண்ட விர்ந்ததினை மங்கி ருந்து
பி னிருந்த வத்தினிர் பொருந்திடு, முண்ட கந்தனி லிருந்தி டுஞ்சதுர்
முகன் றிருப்பதவி முன்னினான். (௧௦௧)

ஓதி மக்கொடி யுயர்த்த நான்முக னுவந்த லோகமதி லுற்றதிற்
கோதி றுப்புரவு துய்த்த பின்புகைகை கொண்டு முப்புர மெரித்திடு
மாதி நற்கயிலை யுற்று ளத்தினி லரும்பெ ரும்பொருள் விரும்பவே
யீதி வற்கரன் மருது தந்தருள வின்ப முற்றினி திருந்தனன். (௧௦௨)

தைத வத்தினுயர் வேட னீடுசிவ கங்கு லென்பதுணர் ராமலே
செய்த வத்திவிது பெற்ற னன்பரம சிவசி வப்பெருமை சிந்தையிற்
பெய்த ருச்சனை புரிந்து கண்டுயில் பிரிந்த ருந்துத றவிர்ந்துளா
ரெய்து நற்கரிய முத்தி வீடதனி லெய்து வார்களிலை யையமே. (௧௦௩)

என்று சூதமுனி யோத மாதவர்கள் யாரு மேருவி லெடுத்தெயி
லன்று நீறுபட நூறு மாறுபுனை யரச னுக்குரிய விரசனி [ன
யென்று பாவலவ் விருட்க ருக்கனிக ரொக்கு மென்பதை யுணர்ந்த
நன்று தேசிகரின் றலை றுமுடி துளக்கி நன்மொழிக ணல்கினார். ()

அங்குலச்சருக்க முற்றிற்று

சவுமினிச்சருக்கம்.

வரதரா யணனென் றோது மறைதெரி முனிவர் கோமான்
பாததா மரைக ளுன்னிப் பரவசத் தோடும் போற்றிச்
சீதகாண் மதியஞ் சூடுஞ் சிவகிரிப் பெருமை யின்னுஞ்
சூதமா முனிவன் மற்றை முனிவரர் தமக்குச் சொல்வான். (௧)

தோடுறு கமலத் தோடு தளிமலர்க் குவளை யாம்பற்
காடுறு கமலை வாவிக் கயலினங் குதித்தங் காடக்
கோடுறு தவளக் கோடு சூயிறுந்தண் பணைசூழ்ந் தம்பொன்
னாடுறு மமரர் தாமு நாடுங்கே கயநன் னாடு. (௨)

அரும்புறு கமலச் சூழி யதனினின் றெழுந்து வாளை
சுரும்புறு மலர்த்தண் சோலைச் சூதநற் கனிகள் சிந்துங்
கரும்புறு வேலி சூழ்ந்த கழனியிற் கதிர்ச்செஞ் சாலி
விரும்புறு முத்து நத்தி னித்திலம் விளங்கு மெங்கும். (௩)

புன்றலைக் கரியசெங்கட் புரிமருப் பெருமை வாயான்
மன்றலைக் கமழும் வாவி மலர்பல மேய்ந்து வாவித்
துன்றலைப் புனல தார்ந்து சுரந்துறச் சொரியுந் தீம்பால்
கன்றலைத் துன்ன வூட்டிக் காஞ்சிமா நிழலிற் றுஞ்சும். (௪)

திறம்பயின் முந்நூல் பெற்றோர் தீதிலா மறைநூல் கற்றோர்
திறம்பயி லரசர் வாசச் சிரகத் தாமர் கொங்கைப்
பறம்பயி னெடுங்கட் செவ்வாய்ப் பார்மகள் புதல்வர் மூன்றா
யறம்பயில் குடிக ளென்று மந்நாட் டகத்தி லுள்ளார். (௫)

வெந்தழல் வேள்வி செய்யும் விப்பிர னொருவன் முன்னா
டந்தருள் மடப்பொற் பாவை சவுமினி யென்னும் பேரா
ளந்தர வானில் வாழு மரம்பையை யனையாள் மாரன்
கந்தமா லார்ந்த தண்பூங் கணைக்கிலக் காக நிற்பாள். (௬)

வளமிகு செல்வந் தன்னில் வளர்ந்தவற் சரமோ ரேழிற்
றளவமென் மூரற் பேதை தையலா ரோடு கூடி
யுள்மகிழ் சிற்றில் கோலி யுறுகழங் கூச லாடி
யிளமயி லனையாண் மங்கைப் பருவம்வந் தெய்து கின்றாள். (௭)

வேறு

தடங்கி டந்திடுந் தாமரை யரும்பெனத் தடித்துப்
படங்கி டந்தபாம் பேந்துபார் பகர்ந்திடத் தரள
வடங்கி டந்திப மருப்பிணை மருட்டிமா மணிப்பொற்
குடங்கி டந்தெனக் குலவிய கொம்மைவெம் முலையாள். (௮)

வடித்த நெட்டிலை வேலொடு மாவடு வடிவாட்
டொடித்த செங்கயல் சுரும்புவேள் கரும்பினிற் றொடுக்குங்
கடிக்க ருங்குவ ளைகடமைக் கடுத்துநீள் வள்ளைக்
கொடிக்கி ளைக்குழைக் குழைகளிற் குதிக்குநீள் விழியாள். (௯)

கருகு கங்குல்பைங் களங்கனி முழங்கிடுங் கடனீர்
பருகு மங்குனற் பதிகமொத் ததிபரி மளங்கண்
மருவி நெய்த்துநீண் டளிக்குலம் விருந்துண மலர்ந்த
முருக லர்த்தொடை சூட்டியே முடிக்குமொய் குழலாள். (௧௦)

கயிர வங்கவிர் தொண்டைமென் கனிகடற் பவளஞ்
செயிர றுஞ்செழுஞ் செங்கிடை கொங்கிடை யிலவம்
பயில் கொழுந்தனு ரனைத்தையும் பழித்துமைக் கடைக்க
ணயில் விடங்கொளு மவர்க்கமு துதவுசெவ் விதழாள். (௧௧)

சலந்த ரும்பொலந் தாமரை மலர்நிகர் முகத்தாள்
கலந்த ருந்தட மார்புடைக் காளைய ரெனுமா
வலந்த ருங்கட கரிகளை வணக்குமங் குசமாய்
நலந்த ருந்திலந் திகழ்குமிழ் நாணுநா சியினாள். (௧௨)

தேன லந்தரு சருக்கரை செழுங்கனி கரும்பு
பான றும்பொழிற் பசுங்கிளி மொழிகளைப் பழித்துப்
பேன வெண்டிரை கடைந்தமுன் றுளவணி பெருமான்
வான வர்க்கருண் மருந்தெனு மதுரமென் மொழியாள். (௧௩)

பாரின் மேல்வளர் மரங்களிற் படர்ந்தமென் கொடியைக்
காரின் மேலெழு மின்னைநுண் ணூலினைக் கடிந்திட்

மேட்ரி னூலுயா மதனா சிருந்திடு மல்குற்
றேரின் மீதவ னெழுந்துசின் ஜெருத்தசிற் றிடையாள். (கச)

வனற்றி ருந்தமு தொழுகிடு மல்குலுக் குலகின்
மேற்றி ருந்தய சிலையொடு தொடுகடல் விடுதேர்
காற்றி ரும்பசிக் கருந்திடுங் கட்செவிப் படமுந்
தோற்றி ருந்தவென் றுலதற் குவமையென் சொல்வாம். (கரு)

மஞ்சஞ் சீறா வெனத்துயின் மாயவன் மனைக்கு
நஞ்சஞ் சீர்விழித் திருமக ளொடொறு நயக்குங்
கஞ்சந் தோற்றிடிற் கழிபனப் பெடைநடை கற்கு
மஞ்செஞ் சீறடிக் குவமைமற் றியாதெடுத் தறைவாம். (கசு)

இளைய வேமொழில் வாய்ந்திடு மிளங்கொடி தனைக்கண்
டளையிந் தந்தைதாய் மிகமகிழ்ந் தகமதின் முந்நூல்
புனையும் பூசுர னொருவனுக் கிசைந்துளம் பொருந்தி
மனையி னன்மறைச் சடங்குடன் வதுவைசெய் தளித்தார். (கஎ)

நாம னுங்கலைப் பனவனு நளிர்மதி முகத்துப்
பூம னுங்குழற் பூவையும் புரிவொடு வைகிச்
சோம னும்புக லுரோணியுந் தவசமீ னுயர்த்த
காம னுந்துணைத் தேவியு மெனக்களித் திடுகாள். (கஅ)

புலந்து றந்துவெம் பிணிகளாற் புணர்ந்தபூ சுரனு
நிலந்து றந்தட லிறந்திட னன்மதி நீங்கிக்
குலந்து றந்திடா நீதியைக் குறித்தவள் களத்திற்
கலந்து றந்துளாள் கலங்கினள் கைமையுற் றிருந்தாள். (ககூ)

வேறு

வனவரிக் குயிலு மன்றிலும் வானில் வருநில வெழுமதிக் கொழுந்துந்
தினகிளா புரக்கு மாயர்வேய்ங் குழலுந் திறம்பெறக் கறங்குசே மணியு
மனமெல்லனக் கனலுங் காமவெந் தீயை யனிலமொத் தனுதின மூட்டக்
கனதனக் கிரிகள் பசலைபூத் தணையிற் கண்படை பொருந்திலள் கலங்கி

கோடுவாய் கூடக் கலைவளர் திங்கட் குடைமதன் படைபடும் பசும்புண், ணூடுநீ டழற்கோ லுழைந்தெனத் தென்ற லுலவகெட் டுயிர்த்துள முருகி; வாடுநா ளிடைபோ லங்கமு மெலிந்து மதனநோய் பொறுக்கரி தாகித், தேடுமோ டவர்கள் பலரையுங் கரவிற் சிந்தனை களித்திடச்சேர்ந்தாள். (உக)

மலைக்கிணை யெனப்பொற் சுணங்கலர்ந் தகன்று வட்டமிட் டெழுந்திறு மாந்த, முலைக்கிடை யிடையுந் தடித்தரி விளரி முரல்செழு முளரிபோன் முகமு, மலைக்கிடை யுதிக்கு மதியமொத் துடலு மந்நிற மாயமு றாறு, மிலைக்கிடை மலர்ச்செவ் வாயிதழ் வெளுப்பக் கருப்பமுற் றிருந்தன ளிப்பால். (௨௨)

அந்தக ருறையு மறைபவ னொருவ மறிந்தன ரவட்சடிந் தகற்ற, வின்னலுந் திரங்கித் துணைவிழிப் புனலா லிணைமுலை களைக்குளிப் பாட்டிக், கன்னலிற் கனிந்த மொழிச்சவு மினியுங் கான்வழிச் சென்றிடுங் காலைப், பின்னவர் குலத்தில் வந்தொரு காளை பிறைநுதலவள்கரம் பிடித்தே. (௨௩)

எக்குலத் துளைநீ யார்மனை பேரோ தெவ்விடத் தெய்தினை யென்ன, மைக்குழற் குயிலு முற்றவா றனைத்து மற்றவற் குணர்த்திட மயல்கூர்ந், திக்குவிற் குனிக்கு மதனனுக் குடைந்தாண் டிங்கிவள் கொங்கைமேற் காதன், மிக்குனக் கினியான் பதியெனத் தனது வியன்மனை மீதுகொண் டணைந்தான். (௨௪)

மருவுயிர்த் திடுதண் மலர்க்குழ லணங்கு மற்றவன் றனுமா மலரிற், றிருவுயிர்த் திடுமைங் கணைக்கிழ வனுநற் றேவியு மாமெனக் கூடி, யிருவுடற் குயிரொன் றுமெனத் தழுவி யின்பமுற் றிருந்திடு நாளிற், கருவுயிர்த் தனள்பைங் காவியங் கண்ணி கணவனுந் தனதுளங் களித்தான். (௨௫)

இன்னணஞ் சிலநாட் கழித்தனன் வேற்றார்க் கிவளுயிர்க் கணவனே குதலுந், தன்னலங் கெடுக்குங் களிமது நுகர்ந்து தமியளா யிருந்துகங் குலின்வாய், மின்னலந் தருநுண் ணிடைமடக் கொடியும் விரகவெந் தீச்சுட வெதும்பித், தன்னலந் துறந்தா னருந்திடும் வேட்கை நனியுறத் தனியிது புரிவாள். (௨௬)

நடைதரு கொச்சை நாருடன் புனிற்று னல்விளங் கன்றுறு தொழுவி, னிடைபுகுந் தருந்து மதுச்செருக் கதனு லிரங்குமா னீன்றகன் றினைக்கொண், டுடையதன் னகத்திற் கொண்டுசென் றிரவி னூனருந் திடுவதற் கெண்ணி, யிடையிருட் கடியத் தகழிநெய் வாக்கி மென்றிரி விளக்குமேற் றினளால். (௨௭)

அவ்வயிற் செருத்த தாவிளங் கன்றென் றறிந்தன ளுயர்ந்தனள் மயங்கிச், செவ்வயிற் கண்ணுள் கன்னலோ ரிரண்டு சிவசிவ வெனத்

தியர் னித்துப், பவ்வநீ ருலகோர் பழித்தகட் குடித்த பிழுதவந் தது வெனப் பயந்து, மெவ்வ மிலாம லூனுணைத் துணிந்தாள் யாவரோ விதி வலி கடப்பார். (௨௮)

புன்னெனுங் கண்ணாள் புள்ளமை தெடுத்துப் புரணிக ளுரித்தரிந் தி ரிஞ்சை, யுள்ளவள் ளுரங்கள் வேறுவே றமைத்திட் டுவெப்புறக் கருவை செய் தருந்தி; வள்ளவாய்க் கமல நாயகன் பூரு வத்திசை வரும்புல ரி யின்வர்ய், வெள்ளெனும் பனைத்து மள்ளினள் கொணர்ந்து வீதியிட் டிவையிசைத் திடுவாள். (௨௯)

வெய்யதீச் சுழல்கட் கொடுவரி வடிவால் மென்குழக் கன்றினை யொறுத்தின், றையகோ தின்று போயது மறுகி லனைவருங் காண்மி னென் றெறிந்து, தையன்மீண் டிற்பா லெய்தினள் வேளாண் டகை பெறு காளைகேட் டெய்திச், செய்யவாய் மையினி பிழைத்தனை போலு மென்னவட் டேற்றின னிருந்தான். (௩0)

வெறுத்தன னிகவா னங்கவள் கொங்கை விழைநல வேட்கைமீ தூர்ந்திட், டிறந்தபே ரன்பா லன்றுபோ லென்று மின்பமுற் றிருந்திடு நாளிற், கறுத்தவல் விடத்தை நிகர்த்தவெம் பிணிகள் காயமீ தடற்றி டத் தேம்பி, மறுத்தவிர் மதியை மருட்டுவாண் முகத்தாள் வருந்தினண் மரணமுற் றனளே. (௩௧)

வேறு

அச்சமை யத்தினி லடர்ந்து வாரியிற்
கைச்சமைக் கடுகிகர் கால தூதுவர்
பொய்ச்சமை மின்னிடைப் பூவை மென்மொழி
மச்சமை விழியுயிர் வெளவி யேகினார் (௩௨)

நந்தலி றென்புல நண்ணி நண்ணரும்
வெந்திறற் கூற்றின்முன் விடுப்ப நான்முகத்
தந்தயி றீவினை யனைத்து மாய்ந்து பின்
பைந்தொடி முகத்தினைப் பார்த்துக் கூறுவான். (௩௩)

அன்றிருட் பொழுதினி லானின் கன்றினைக்
கொன்றிருந் தரன்றிரு நாமங் கூறிய
நன்றியிற் கொடுந்தழ னரகந் தாய்த்திடு
மென்றிய திவ்வினைக் குரிய ளல்லளே. (௩௪)

கிலெழுக ளாக்கிய தேவன் பின்வரு
மலைமகட் குடலிடம் வழங்கி வானதி

யலைமகட் குடிஞொ ணருளிற் கூறினான்
புலைமக ளாய்ப்புவி போதி நீயென்றே. (௩௫)

அந்தக னனையா ளழகின் மேனியு
நொந்துடல் பொறுக்கொணா நோய்க ளுங்கொடு
கந்தமார் குவளைநேர் கண்க ளின்றியே
வந்தொரு புலைமகள் வயிற்றிற் றோன்றினாள். (௩௬)

அறந்தவாத் துறவிர்கா ளணங்கு நோயுடன்
சிறந்தவாட் படைநிகர் திருட்டி யின்றியே
மறம்புரி புலையர்தங் குலத்தில் வந்தவள்
பிறந்தகா ரணமினிப் பேசக் கேட்டிரால். (௩௭)

உம்மையிற் கற்பொரீஇ யுளத்த வாக்கொடு
கைகமையிற் பலனையுங் கலந்த தீமையாற்
செம்மையின் மேனியிற் றீய குட்டமும்
வெம்மைகொள் சூலைநோய் முதல்வி யாதியும். (௩௮)

பெற்றன ளவளொரு பிடிய தாயினு
மற்றவர் பசிக்கன லவிக்க விட்டிலாக்
குற்றம தாற்பசிக் கொடுமை கூர்துய
ருற்றவ டேம்பியு முடலந் தாங்கினாள். (௩௯)

பலத்தினை மிகத்தரும் பசுவின் கன்றினை
வலத்தினிற் செகுத்தவ ளூனங்கண் மாந்தலா
னிலத்தினிற் புன்றொழி னீச ரொன்றிடுங்
குலத்தினிற் றோன்றினள் கொடிய நீர்மையாள். (௪௰)

எண்ணுநல் வினையினை யிகந்து தீவினை
பண்ணிட வியற்றுகட் குடித்த பான்மையாற்
கண்ணிணை யின்றிமைக் கடலு டுத்திடு
மண்ணின்மேற் றோன்றிமெய் வருந்தி னாளரோ. (௪௧)

வேறு.

இளைய நீர்மைய ளீன்றதாய் தந்தைய ரிறப்ப
மனையெ னத்தனை மணந்துகொள் வார்களு மின்றி
யனைய வூர்ப்புலைச் சேரியி னையமேற் றருந்தித்
தினையி னோர்கல னின்றிநல் குரவொடு திரிந்தாள். (௪௨)

திரைமு திர்ந்தொர்யாத் திரையுகித் திரையிலாள் கரைத்
மரைமு திர்ந்திடக் குரைத்திட வளைந்துமெய் கூனி
யுரைமு திர்ந்தவ ருவமமிட் டுரைத்தகொக் கொப்பாய்
நரைமு திர்ந்துநல் லிளமைபோய் முதுமைநண் ணியபின். (௪௩)

சொன்ன மாகநற் சிவசிசி னோற்றிடத் தொடங்கி
யன்ன மாநகர்ச் சனஞ்செல வறிந்தவர் கூடப்
பின்ன மன்றிமற் றொருபுலை மடந்தைதோள் பிடித்துக்
கன்ன லார்வய றுன்னுகோ கன்னமீ தடைந்தாள். (௪௪)

தீய வெம்பசி கன்றறவோர் தெருத்தனி லிருந்து
தூய கண்ணிலேற் குதவுமின் சோறெண விரந்து
கூய போதிலம் மறுகிடைக் குறுகுமோர் கலிய
ளுய் வில்வகிற் குணவிதென் றவள்கரத் தளித்தான். (௪௫)

புன்மை யாலவ் ளிட்டகூ விளைதனைப் புசித்தற்
கன்மை யாலய லெறிந்தன ளாங்கது பழைய
தன்மை யாகிய சிவலிங்க நாயகன் றலையிற்
றின்மை தீர்ப்பவர் சாத்திய தழையெனச் சிறந்த. (௪௬)

அற்றை நாட்சிவ ராத்திரி யனந்தலூ ணகற்றிப்
பற்றை நேர்கரப் பரையொரு பாகமாம் பரமன்
கற்றை வார்சடை முடியெறி கவின்கொள்வில் வத்தாற்
பிற்றை நாட்சிவ பூசனை புரிபலன் பெறுவாள். (௪௭)

யாம நான்குமன் றிரவுபத் துகமென வெண்ணித்
தூம மாரழற் பசியினாற் றுயின்றில ளிருந்தாள்
சேம மார்தடந் தேர்கடி தருணன்முன் செலுத்தக்
காமர் செங்கதிர்க் கடவுளுங் குணபுலத் துதித்தான். (௪௮)

விடியல் காண்டலு மீண்டொரு தெருத்தலை மேவி
யடிசி லேற்பமற் றப்புலை யரிவைதோள் பற்றி
கொடிது சேறலுங் காறளர்ந் துயிர்நிலை நீங்க
மிடிசெய் மூப்புவெங் கோய்பசி வருத்திட வீழ்ந்தாள். (௪௯)

ஆத பத்தழல் கொளுத்திய நிலத்தில்வீழ்ந் தழுந்தி
யேத முற்றவள் பட்டவெந் துயரள விலைப்பின்
பாத கப்புலை மகளுட னணந்துயிர் பறிந்து
போதலுற்றிடத் தொடங்கியே புறப்படும் போதில். (௫0)

பணிப்ப ணிப்புயக் கணிச்சியம் படைப்பர னருளா
லெணிக்க ணிக்கருங் கணங்களை யேவிநீர் மேவிக்
குணிக்க ருப்பலை மகளுயிர் கொணர்மினென் றுரைப்ப
மணிச்செ ழுஞ்சுடர் விமானமோ டிம்பரின் வந்தார். (௫௧)

அன்ன காலையிற் புலைமக ளாவியைப் பொலமென்
றுன்ன வேவருந் திவ்விய வுருவினிற் சேர்த்துக்
கின்ன ராதியர் பாடிடக் கிளிமொழித் துவர்வாய்ச்
சின்ன நூலிடை யரம்பையர் நடம்பயில் செய்ய. (௫௨)

தக்க துந்துபி முழக்கிடச் சாமர மிரட்ட
வக்க ணத்தினி லவிர்மணித் தேர்மிசை யேற்றித்
தொக்க வெண்ணிறச் சோதிவிட் டொப்பறத் துலங்கு
மிக்க பேரொழிற் கயிலையிற் செல்லுவான் விரைந்தார். (௫௩)

கன்ன னாயிரங் கன்னனென் கன்னனற் கதிர்க
டன்னொ னான்மதிக் கடவுளுஞ் சலசநட் புடைய
வன்னை வான்கதிர் வானவர் முனிவ ருரகர்
விண்ணு லாவிய சித்தரோ டியக்கர்விஞ் சையர்கள். (௫௪)

பரிந்து போற்றினின் றவர்க்கெலா மருள்விழி பரப்பி
வரிந்த நீள்குரல் மாடகத் திவவியாழ் வாங்கிப்
புரிந்த வார்சடை நாரதன் புகலருஞ் சுருதி
தெரிந்து பாடிய பாடலிற் செவித்துணை கொடுத்து. (௫௫)

கையின் மான்மழுப் பிறங்கிடக் கனற்பிழம் பனைய
மெய்யி னீற்றொளி விளங்கிட விடநுகர்ந் திருண்ட
மையி னிற்றிகழ் கண்டமும் வண்டுபாண் மிழற்றச்
செய்யி னுறுசெங் கமலநேர் வதனமுந் திகழ. (௫௬)

படரு மென்கொடி யறுகிலைப் பசுமையாற் பொறிப்பை
விடவெ டும்பணிச் சுடிகையிற் றிகழ்மணி வெயிலா
லடர்த டர்திரைக் கங்கையா லணிசடா டவியிற்
றொடருஞ் சந்திர னிந்திர சிலையெனத் தோன்ற. (௫௭)

உழலை சேர்பவ வெயிற்கொதுங் கிடத்தன துபய
கழலை நீழலா யடியவர்க் கருள்புரி கர்த்தன்
குழலை யாழினை யமுதினைக் குழைத்தன குதலை
மழலை கேட்டென மகிழ்ந்திடு வாணகை வயங்க. (௫௮)

கலக வாள்விழி யரம்பையர் கவரிகா லசைப்ப
வுலகி லாருயி ரனைத்தையும் பெற்றசிற் றுதரத்
திலக வாணுத லுமையுடன் செம்பொனா லியன்ற
விலகு மாமணி யாசனத் திருந்தன னிறைவன். (ருகூ)

ஆறு சூடிய வண்ணன்முன் னந்தரத் தியங்கு
மேறு சீர்மணி விளங்கிய விமானமின் றிறக்கிக்
கூற்று மிப்புலை மடந்தையை விரைந்துடன் கொடுபோய்
வீறு சேர்கண நாதாக் கணத்தினில் விடுத்தார். (சுO)

எம்பி ரான்றிரு வுளங்களிக் கிரங்கியங் கவடன்
வம்பு லார்திரு மலர்முக நோக்கியவ் வரைக்க
ணம்பு லாம்விழி மாதரோ டிருத்திமற் றதற்பி
னும்பர் காட்டரு முத்தியுந் தருதுமென் றுரைத்தான். (சுக)

அனைய வவ்வுரை கேட்டன னகமகிழ்ந் திருந்தா
னினைய காக்கதை படித்தவர் கேட்டவ ரெவரும்
வினையொ ழிந்தா னருள்பெறு வாரென விரித்துப்
புனைநெ டுஞ்சடைச் சூதனம் முனிவர்க்குப் புகன்றான். (சுஉ)

சவுமினிச்சருக்க முற்றிற்று.

கன்மாடபாதச்சருக்கம்.

ஏதமற் றுயர்ந்த சீர்த்தி யெம்பிரா னிரவின் காதை
யோதமற் றுளதோன் றுங்கட் குணர்த்துவன் கேண்மி னென்று
மாதவத் துயர்ந்த செய்ய மறைதெரி முனிவர் கேட்பச்
சூதனுற் றமுத மாரி சொரிந்தெனச் சொல்ல லுற்றான். (க)

பைம்புலி புலர்த்துங் கொங்கைப் பாவைய ருடுங் காலச்
சம்புலி வருந்த மாலைச் சமனெயி றென்ன வேக
வெம்புலி யென்ன முன்னி மேற்றிசை தோற்று மென்கேற்
றம்புலிக் கொழுந்தா ரிஞ்சி யயோத்திமா நகரொன் றுண்டால். (உ)

மன்னர்தம் மன்ன னென்ன வருந்தச ரதன்பான் முன்னாட்
பன்னக மீதிற் றுஞ்சும் பசுந்துழாய் முகுந்தன் றோன்று
மந்நக ரளிக்கும் வேந்த னுதயர் குலத்தில் வந்தோன்
கன்னலந் திருதிண் டோளான் கருதலர்க் கடியும் வாளான். (ங)

குத்திர மறவோர் செய்ய கோல்வளை யாமற் கோளிப்
பத்திர சயன னென்னப் பரித்துயிர் பாது காப்போ
னத்திர நயனச் செவ்வா யரிவையர்க் கனங்க னன்னான்
மித்திர சகன னாமம் விளங்கிலை யலங்கல் வேலோன். (௪)

குன்றென வளர்ந்து வீங்குங் குவிமுலைப் பவளச் செவ்வாய்
மன்றலங் கோதைக் கோதை மதயந்தி யென்னு மாதைத்
தன்றடஞ் செங்கை பற்றிச் சடங்குசெய் தழல்சான் றாக
முன்றவ முடிவான் மன்றன் முடித்தவன் முயங்கு நாளில். (௫)

விலங்குபுள் கலங்க மாய்க்கும் வேட்டமேன் விருப்ப முற்றி
யுலங்கெழு வயிரத் தோளா னொண்மலர் பொதுளிப் பூத்த
பொலந்தரு சினைகள் வானம் போனவெங் கானம் போவான்
பலங்கொள்கா முகப்பட் டாடை பட்டிகை மருங்கிற் சேர்த்தி. (௬)

செஞ்சுட ரெறிக்குஞ் செம்பொற் செழுமணி மகுட நீக்கிக்
குஞ்சிபூந் தொடையிற் சூழ்ந்து குலவிட விசித்துக் கூர்மை
விஞ்சிய சுரிகை சேர்த்து வெறுக்கையி னமைத்த பச்சை
மஞ்செனத் தோற்றுஞ் சோதி மரகதக் கவச மிட்டு. (௭)

கைப்புடை கட்டி வென்னிற் கடுங்கணைத் தூணி தூக்கி
மைப்புடை வரையுங் கண்ணார் நுதலிகர் வரிவில் வாங்கி
மெய்ப்புடை மனங்கா லொத்து விரையுமைங் கதியிற் செல்லு
நெய்ப்புடை மேனி மேக நீணிறப் பரிமேற் கொண்டான். (௮)

சங்கொடு படகங் கொம்பு தவிறுடி தழங்கி யார்ப்ப
வெங்கொடுங் கொலைசெய் வாளி வில்லொளி விளங்கும் வைவே
லங்கவை தரித்த தானை யளவில சூழ மண்ணிற்
பொங்குநுண் டூளி யோரெண் புலம்புக விசும்பு போர்ப்ப. (௯)

பெரும்புரி வலைவார் கூந்தற் பிடியினஞ் சுமந்து செல்ல
விரும்புறு வேடர் கையில் விண்ணாந்தெதிர் குரைக்கு ஞாளி
யிரும்புறு தொடரிற் பூட்டி யீர்த்தனர் செல்ல வல்லே
சுரும்பிமிர் தொடையான் கானச் சூழல்வாய்ச் சென்று புக்கான். ()

வேறு.

வலைவார்பல கிலையாடெடு வானூடு வளைப்பார்
சிலைகோலினர் சிறுகானொலி திசையேற விடுப்பார்

கலைமான்மணா முயனீடிய களிறேறு களிற்றின்
றலையேயாயற விறன்மீளிகள் சரமாரி தொடுப்பார். (கக)

கொடிகொண்டிடு தருவிற்படர் கொம்பேறி விழிப்பா
மடியுஞ்செவி வளைவாலகல் வாய்நாய்கள் விடுப்பார்
தடிகொண்டெறி தருவார்கழல் தழலின்க ணுகைப்பார்
பொடிகொண்டிடு நிலனிற்சில பொறிநின்று புதைப்பார். (கஉ)

அடல்சேருழை படர்தாரியி னடிதேடினர் தொடர்வார்
மிடல்சேர்தரு மிருகாரியை விறல்வேலினி லெறிவார்
வடவாமுக வனலார்சின வலிநீடுகி ருளியத்
துடலூடுற வடிவாளிக ளுடனேவினர் விடுவார். (கங)

வருமித்திரன் மாபுற்றிடு மனன்முற்றரி யலர்போர்
பொருமித்திர சகனுற்றொரு புரிவிற்றனி குனிவித்
துருமிற்றொடு கணையிற்பல மிருகத்தை யொறுத்துத்
தருமித்திற லெவரிப்புவி தனிலொப்பென நின்றான். (கச)

வேறு.

இவ்வண்ண நெடுங்கானி லடுஞ்வேட்டம் புரிந்திடுமவ் வெல்லை காலை, மைவண்ணத் தடலரக்க ரிருவரொரு வயிற்றுதித்தோர் வந்து தோன்றிப், பைவண்ணப் பெரும்பாந்த ளேந்துலக மொருகுடைக்கீழ்ப் பாது காக்குஞ், செவ்வண்ணக் கதிர்வேலோ னுடன்றருக்கி நெருக்கியமர் செய்கின் றாரால். (கரு)

அங்கிலகண் டன்னவரின் முன்னவனைத் தூர்தரச னங்கைவாளாற், சென்னிதுணித் தனன்குருதி நீரோட வாங்கதனைத் தெரிய நோக்கி, யிங்கிலையில் வெலற்கரிதென் றிளையோனும் வஞ்சகங்களியற்றி யானே, பின்னிவனை வெல்வனென மீண்டோடி மனிதருருப் பெற்று வந்தான். (கசா)

வந்தரசன் றன்னிருதா டொழுதெழுது மாங்கவனும் வரவேதென்னச், சந்தணிகுத் திரப்புயமித் திரசகனே யுனதேவல் சலிப்பிலாம, லிந்தவுட லுள்ளளவு மிழைத்திடுவா னெண்ணிவந்தே னென்னமுன்னங், கொந்தழலி லடிசிலடும் வாலுவர்தந் தொழிலவற்குக் கொடுத்தான் மன்றோ. (கஎ)

வன்புலஞ்சரி னனம்பயிலும் வனநீங்கி யயோத்திநகர் வந்து தங்கும், பின்புலஞ்செய் திரடோளான் மதயந்தி யுடன்வாழ்விற் பெ

முனமே யிவனைக் கொல்லுவை யாயின் முளிதரு விறகுதீ மூட்டி, யென்னதா ருயிரு மிறப்பனின் றெனக்கோ ருயிர்ப்பலி யீதியென்றி ரங்கி. (௬௧)

தன்றுணைத் தடங்க ணீர்முலைத் தடத்திற் றூளாவிட் டொழுகநின் றிரந்தே, யன்றுரைத் திடுஞ்சொற் செவிக்கொளா னாகி யந்தணன் மைந்தனை விளாவிற், கொன்றுடற் குருதி பிழிந்துமுன் குடித்துக் கொழுந்தசை கறித்தகல் வாயின், மென்றுட னருந்திப் பைந்தொடிக் கெதிராய் வெள்ளெலும் பனைத்தையு முமிழ்ந்தான். (௬௨)

என்செய்வா னுமிழ்ந்த வென்பெலா மடியிட் டெடுத்தன ளெய்தி யவ் வென்பை, மின்செய்தீ யதனிற் பெய்திது செய்த வேந்தர்கோன் றன்பதி மேவிப், பொன்செய்பூண் முலையார் முலைநலப் போகம் புணருநா ளிறக்கவென் றுருத்து, முன்செய்தீ வினையாற் சாபமீ திட்டு முழங்கழ லூடுபுக் கவிந்தாள். (௬௩)

வேறு

புரமுனியும் ப்ரமனிரு பதப்போது முப்போதும் போற்றுந் தெய்வ, வரமுனிவன் சாபமகன் றசனிரு மருப்பொருமும் மதகால் வாய்க்குஞ், சரமுனிவன் பிடிதிரிச ரிகடெரிந்தே யரிதருவுந் தடங்கா னீங்கிக், கரமுனியுஞ் சனையுமில்லாக் காமனென வயோத்திநகர் கடிதி னுற்றான். (௬௪)

நெடிதுதினம் பிரிந்தகன்ற நீர்மையினாற் றிரண்ட திண்டோ ணிருபன் றானு,மடியிணையா மலர்கள் கன்றிச் செப்பூர விளாந்துநடந் தன்பி னேடும்,பிடியதனை நாடிவரும் பெருந்தடக்கைக் களிறெனவேள் பெய்யும் வெய்ய,வடியயில்வா ளிரியினுடைந்து வருந்தியந்த மதயந்தி மனையுட் புக்கான். (௬௫)

வந்தவடன் றுணைமுலைகண் மருவுவான் றுணிந்திடலு மன்ன காணி, லந்தகிசி சரனாகி முனிவனைக்கொன் றனையதனு லவன்றன் றேவி, வெந்தழலின் மிகச்சீறி யுன்மனைவி மார்முதலா விளம்பு மாதர், தந்தனமீ துறத்தழுவி விறத்தியெனக் கொடுஞ்சாபஞ் சாற்றி வீந்தாள்.

ஆதலினா லெனையணைதற் கடாதுனக்கென் றவள்கூற வாசன் மோகக், காதலினா லிடைந்து செம்பொற் கலத்தமுதம் பெற்றருந்தக் கடனி லான்போ, னூதகவுற் றில்லமில்லாற் கருமகப்மே றில்லேயுவை நுனித்து நோக்கிற், சாதகருக் கிகபரத்திற் பலன்கிடையா தெனத்தேறித் தவமீக் கொண்டே. (௬௭)

ஒருமணமா யிருவினையின் றுவக்கறமுக் குறும்பெறிந்திட் டைவர்
வாள்வேந்தர், தருபொருளா யைந்தவித்ததந் தழனுப்ப வின்றுபெருந்
தவங்களாற்றிக், கருதருமா மறலிவலை கடந்தமுக்கா லமுமுணர்ந்து
கணிக்க வல்ல, பொருவருமா முனிவரர்க ளனுமதிகொண் டரியதவம்
புரிவு மேல்வை. (௩௮)

வேறு.

கறைவிட முகுத்தல் போலக் காய்சின மிகுத்து வானிற்
பிறையெயி றிலங்கப் பேழ்வாய்ப் பேய்மக ளொருத்தி பற்றி
யிறைவனை வருத்த வீதிங் கென்னெனப் புன்னு தொன்னூான்
முறைதெரிந் தருளுந் தெய்வ முனிவரா விருவி னனே. (௩௯)

கணித்தறுக் காலந் தேருங் கடவுண்மா முனிவர் துத்திப்
பணித்தலைக் கிடந்த ஞாலம் பரித்தரு ளரசே முன்னாட்
குணித்தவா ளரக்க னாகிக் கோதில்வே தியனைக் கொன்று
பிணித்தவெம் பாவங் கண்டா யலகையாய்ப் பிணித்த தென்றார். (௪0)

அப்பவந் தீர்ப்பா னெண்ணி யலைகடற் சேது முன்னாச்
செப்பருந் தீர்த்தம் யாவுஞ் சென்றாடின் மூழ்கி மூழ்கி,
யொப்பரும் பிரமன் றன்னை யுந்தியிற் றந்த மாயன்
பைப்பணி சடையான் வைகும் பதிபல வணக்கஞ் செய்தான். (௪௧)

உந்துவெண் டிரைநீர் வேலி யுலகெலா முழந்து சூழ
வந்துமப் பிரமகத்தி மாறிடா திருந்த வாலே
யிந்துமண் டலம்போ யோங்கு மிஞ்சிசூழ் மிதிலை ஞாங்கர்க்
கந்துகொல் களிற்று வேந்தன் கவலையுற் றிருந்த காலை. (௪௨)

மாதவர் மருங்கு சூழ வளரிள மதியஞ் சூடி
நாதனிங் கிவனு மென்ன நானில மதிக்குந் தக்கோன்
பாதபங் கயங்க ளேவப் பார்த்திவ னிருக்கும் பாங்கர்க்
கோதம னென்னு நாமக் குலமறை முனிவன் வந்தான். (௪௩)

அன்றிருந் தவனைப் போற்றி யடிதொழு தங்கை கூப்பி
நின்றிடும் வடிவேற் றானை நிருபனுக் காசி கூறி
நன்றிருந் தனையோ வென்ன நவின்றுநின் முகத்தின் சோதி
குன்றிய தியாது வந்த குறையெனக் கறைதி யென்றான். (௪௪)

திருந்துநூ லுற்றுங் கற்றோன் றிசைமுகற் குவமை சான்றோ
னருந்துதிக் காவி யன்ன வருண்முனி யரக்க னாகி

வருந்துதி யென்னச் சாபம் வழங்கலால் வந்த தென்றுப்
பெருந்துதி கூறிப் பின்னு நிகழ்ந்தவை பேச லுற்றான். (௪௫)

அரக்கனாய் வனத்தி லன்று ளந்தணற் கொன்ற பாவ
மிரக்கமி லலகை யாகி யிங்கெனைத் தொடர்த லாலே
பரக்கும் வெண்டிரைத் தீர்த்தங்கள் பற்பல படிந்து பொற்கோ
புரக்கவின் படைத்த கோயிற் புண்ணிய தலஞ்சே வித்தேன். (௪௬)

எண்ணருந் தருமஞ் செய்தே னிறின் மந்திர நவின்றேன்
விண்ணவர்க் கவிக ணல்கும் வேள்விகள் பலவுஞ் செய்தேன்
பண்ணரும் பாவ நீங்கப் பெற்றிலேன் படிவ வுன்றன்
கண்ணருள் பெற்றே னுய்யுங் காலமு முளதா மென்றே. (௪௭)

அன்னமா முனிவன் றூய வடிமுடி சேர்த்தி நின்ற
மன்னவன் றன்னை நோக்கி வருந்தலை மதியஞ் சூடும்
பின்னலஞ் சடையாற் கன்பு பெருக்குநோன் புகட்குண் மேலா
யுன்னரும் விரத மொன்றுண் டுணர்ந்திலை போலு மானீ. (௪௮)

மாகமா மதியிற் றேய்ந்த மதியிற்பன் னான்காம் பக்கத்
தேகநா யகனைப் போற்றி யீரிரு சாமந் தோறுந்
தாகமாம் பசிக்கூண் டுஞ்ச றவிர்ந்தளத் தொருமை கூரன்
பாகமா னாரந் தன்னு லருச்சியுன் னரந்தை நீங்கும். (௪௯)

வளையிலக் காகத் தொட்ட வாளிக டவறு தோங்கித்
தளையிசை யடித்த கைதான் றப்பிடா ததுபோ லீசன்
குளகழற் பதும நோக்கிக் குறித்தநோன் பியற்றி நின்றாற்
புளையறப் பலிக்கு மென்றுப் புரவலற் குணர்த்துப் பின்னும். (௫௦)

நற்றல மதனிலிந்த நவையிலா விரத நோற்கிற்
சற்றல மிகுதி நன்மை தந்திடுஞ் சடுதி யென்றுக்
குற்றமின் முனிவன் கூறக் குறிக்குமத் தலமு மெற்கே
சொற்றருளைய வென்னக் கௌதமன் சொல்ல லுற்றான். (௫௧)

வேறு.

சொன்ன தலங்களின் முன்னி வருந்திய தூயோய்நீ
யுன்ன வருக்கிரி மன்ன னளித்திடு மூமைகூட
மின்னவி ரஞ்சடை முன்னவ னன்பொடு மேவுங்கோ
கன்ன மெனும்பதி யொன்றுள தங்கது சகனுயால். (௫௨)

அத்தலத் திற்றகை முற்று முணர்த்திட வார்வல்லார்
மூத்த நகைத்திரு வுக்கிறை திக்கு முகத்தோனற்
சித்த ரியக்கர் மயக்கறு நற்றவர் சேணுடர்
சித்தி மியற்று தலத்தின் முயற்சியி னிற்பரோ (ருங)

ஆடு முனிக்குழு வாயிர கோடி யரன்சீரைப்
பாடு முனிக்கண மெண்ணில சித்தி படுத்தியோகிற்
கூடு முனித்திரள் பற்பல வுற்றிடு கோகன்னம்
வீடு பெறற்கினி யப்பதி யொப்புற வேறுண்டோ. (ருச)

அத்தலை மாதவர் வானவர் மானவ ரானோர்மா
சித்தருட யார்வெரு வக்கட மிக்கிடு திக்கானை
முத்தலை வால மருப்பணி மார்பின் முரித்தோன்கம்
பத்தலை யானகன் முற்பக லர்ச்சனை பண்ணெண்ணி. (ருரு)

ஓர்சிவ லிங்க முறும்படி வானி லுயர்ந்தோங்கு
மேர்பெறு வெள்ளி விலங்கலி னற்றவ மேசெய்யக்
கார்பெறு கண்ட னரக்கர் குலத்திறை கைதன்னிற்
பேர்பெறு லிங்க மளித்தவ னோடிவை பேசுற்றான். (ருசு)

பார்தனில் வைக்கி லெடுக்க வொணாது பகர்ந்தேமுன்
னூர்தரு மூர்த்தி யொழிந்தனை லகக்கொடு னூர்மேவிச்
சீர்தரு லிங்க மிதைப் பிரதிட்டை செயிற்பாரி
னோர்தரு முன்னை வெலற்குரி யார்பிற ரிலையென்றே. (ருஎ)

வித்தக னோது விடுப்ப வரக்கனும் விடைகொண்டே
சித்த முவந்து நெறிக்கொடு பார்மிசை செல்போதிற்
புத்தமு தத்தினை யற்பொடு துய்த்திடு பொன்னாடர்
மத்தக வேழ முகத்த கணேசனை வந்தித்தே. (ருஅ)

எண்டரு மீச னளித்த விலிங்க மிலங்கைக்கே
கொண்டகல் கின்றன னின்றெதிர் சென்றொரு கோள்செய்தே
தண்டரு தாண்மலர் நோவ நடந்திடை தடைசெய்ய
மண்டனி னீடிய மூடிக வாகன வருகென்றார். (ருகூ)

உற்றிடு வானவர் சொற்றி— நான்மறை யோனாகி
மற்றிர டோளவ் வரக்கன் வரும்பெரு வழிதன்னி
னிற்றிட மற்றவ னுந்தனி வந்தவ னேருற்றான்
முற்றினி லற்பச லத்தை விடுக்க முடுக்குற்றே. (சுo)

அச்சிறு வேதிய னங்கை யிலிங்க மளித்தன்னோன்
மெய்ச்சிறு நீங்கிட மேவிய காலை விரைந்திங்கன்
முச்சொலி னிங்ஙனை விளிப்ப னதற்குமுன் முன்னாயே
யிச்சிவ லிங்க நிலத்தி லிருத்தவ னென்றானால். (௬௧)

அம்முறை யாக வரக்க னிசைந்தய லகல்போதின்
மும்முறை கூவின னெய்தில னையிரு முடியோனு
மெம்மிறை நீதி யிதென்று கனத்தவ னெய்தாமுன்
னைம்முறை யாயொளிர் கண்டனை மண்டனில் வைத்திட்டான். (௬௨)

பின்பவ் வரக்கர் பிரானவ னுற்றழல் பெய்கண்ணான்
நன்புவி யிற்சிவை யோடிய தென்று நடுக்கெய்தித்
துன்பொடு பத்திரு தோள்வலி கொண்டு தொடர்ந்தோடு
வன்பொ டெடுத்திது மாபெல மென்றான் வலியில்லான். (௬௩)

மன்னவ வாதலின் மாநில மாபெல லிங்கம்பே
ரென்ன விளம்பிய தின்னமு மீளவி லங்கைக்கோன்
பன்னக மேவுகை பற்றி யெடுக்கப் படிமீதி
னன்ன றிலிங்க மெலிந்து நிமிர்ந்தது கைந்தங்கே. (௬௪)

ஆவி னெடுஞ்செவி போல நிமிர்ந்திடு மதனாலார்
காவி னிடும்பெயர் கோகன மென்றனர் கனிகூரு
மேவி னலந்தரு வாள்விழி யம்பிகை யிடமேவுந்
தேவி னருஞ்சிவ லோகமி தென்றறி திணிதோளாய். (௬௫)

வேறு.

மாவின்வடு வகர்த்தவிழி மலைமகளை யிடங்கொண்ட
தேவனருள் சிவலிங்க மெடுக்கநைந்தோன் சினங்கொண்டே
காவனைய கைத்திரளாற் கன்றரக்கன் மறைமதலைத்
தேவனது குடுமிமுடி புடைத்தனன்றன் சினமிகலால். (௬௬)

புடைத்தவுட னுருத்தெழுந்து பொழிமதவா ரணமுகத்தோ
னடித்தலமு மணிமுடியு மகலிடமும் விசும்புமுறப்
படைத்தவுரு வெனநிமிர்ந்து பணைக்கரத்தா லிராவணனைப்
பிடித்துமணிக் கழங்கென்ன வெறிந்தெறிந்து பிடித்திடலும். (௬௭)

மறையோனென் றனைநினைந்த மடமையினா லீதிழைத்தேன்
பிறையோங்கு மணிமகுடப் பெருங்களிறே பிழைசெய்தே

னிறையோனே பொறுப்பதுனக் கியல்பென்றேன் றேத்துதலும்
பொறையோடு முமைபுதல்வன் புவியிலரக் கனைவிடுத்தான். (௬௮)

சிருதர்குலத் திகல்வேந்தே யினதுபிழை யாம்பொறுத்தற்
கிருபதுசெங் கரத்தாலு மெழின்மலரோன் முன்கவித்த
வொருபதுமா முடித்தலையு முறப்புடைத்தி யெனலோடுங்
குருதிநிறங் கொளப்புடைத்துக் குதித்தாடி யுவப்பித்தான். (௬௯)

அன்னதுகண் டுவந்தருளி யைங்கரத்தோ னின்றுமுத
லென்னருணன் னலம்வேண்டி லின்றுனைப்போ லிருகரத்தாஞ்
சென்னியுறப் புடைத்தவர்பாற் சிந்தைமகி ழுவமென்றே
மின்னின்மறைந் தனனிருதன் வேலையிலங் கையிற்புகுந்தான். (௭௦)

தென்னிலங்கை யிராவணன்பாற் சிவனுதவத் திறலரக்கன்
பின்னிலங்கு மொருமருப்புப் பெருந்தகைதன் கைக்கொடுப்ப
வன்னலிங்க மைங்கரத்தோ னங்கையினா னட்டியதா
லிந்நிலத்திற் சிவலோக மெனவிளங்கி யிருந்துளதால். (௭௧)

வேறு.

இத்தகைய கோகன்னந் தன்னினென்ன லொருபுலைச்சி யிருகண்ணில்லாள், சுத்தவமு தெனவெளுத்த நரைதிரைநோய் மூப்புடையாள் சுருதி போற்று, மத்தனிர வெனவுணரா ளங்கடைந்து பசிமிகுத்திட் டகடு காயச், சித்தமதி லிரக்கமுள்ளோர் சோறிடுமி னெனக்கெனவேயோர் தெருவி னுற்றாள். (௭௨)

அத்தெருவின் றலைவருமோர் களியனிழி குலத்தவட னங்கையீன்றின், முத்தளக்கூ விளமுணவென் றிடுதலுமேற் றெறிந்தனனான் முன்னூட் டாயித், துத்தமர்பூ சித்தபுரா தனவிலிங்க முடிமீதி னுளத்தன் போடும், பத்தரிடும் பச்சிலைபோ லானதவள் பசிமிகக்கண் படைசெய்யாளாய். (௭௩)

இருளகல விடியுமட்டும் வருந்தியிருந் திரவியுதித் தெழுந்த பின்னத், தெருவினிடை யிரந்திடவோர் புலைச்சியெதிர் வழிகாட்டச் செல்லுங் காலை, மருவியநோய் பசிமூப்பு வருத்திடவெஞ் சுடுமணற்கீழ் மயங்கி வீழ்ந்தங் கொருவியுயிர் பிரிபொழுதிற் பரமனுயர் கணங்கட்மை யுற்று நோக்கி. (௭௪)

சிந்தருகோ கன்னத்திற் சிவநிசியி லுண்டிதுயி னீர்ந்து வில்வர், தேர்தருநற் கூபந்தழைகொண் டெம்மையருச் சித்ததனா லிமைக்குஞ் செம்பொற், றேர்தனிலப் புலைமகளை யேற்றியிங்கு வருதிரெனச்

செப்ப வன்னோர் பார்தனிலுற் றனைவரும்பரம் பார்த்திருக்க வங்கவளைப் பணிந்து போற்றி. (எ௫)

செம்பொனெடுங் கொடிஞ்சிமணித் தேர்மீதி லிருத்திமிகு சிறப்பினோடு, மும்பர்மட மகளிர்வெண்சா மரையிரட்டப் பைந்தருவினுலவை யீன்ற, வம்பவிழ்பூ மழைபொழிய வளங்கெழுதுந் துந்துபிமுழங்க மழுமர னேந்து, மெம்பரம னினிதுறையுங் களதப்த கிரியின்மிசை யேகினாரே. (எ௬)

ஆதலின்மித் திரசகனே நீயுமந்தக் கோகன்னத் தடைந்து போற்றித், தீதகலுஞ் சிவநிசிநோற் றிடிலுனது வினையனைத்துந் தீருமென்ற, கோதகலும் பெருந்தவத்துக் கோதமனங் கவற்குவிடை கொடுத்துப் பின்ன, ரேதமின்மா தவர்சூழ்ந்து வரமிதுலை நகர்நோக்கி யேகினானால். (எஎ)

புண்ணீரின் கடற்றுப் பொருகளத்தி லொன்னலர்தம் புயந்தோய்மின்னார், கண்ணீர்மை கலந்தொழுகக் கலுழ்ந்தணிபொற் கலன்வாங்கக் கதிர்வேல் வாங்கி, மண்ணீர்மை பெறப்புரந்த மன்னவனுந் தாகமுற்று வருந்தினோர்க ளுண்ணீர்பெற் றதுவெனத்துன் பொழிந்துயர்கோ கன்னமுற்றா னுவப்பினோடும். (எ௮)

பூகநெடும் பொழில்புடைசூழ் முப்பதியிற் புகல்கோடிப் புனலின்மூழ்கி, நாகர்தினந் தொழுதெழுமா பெலவிலிங்க நாயகனை நண்ணிப் போற்றி, மங்கமதிச் சிவநிசியின் மறைமுதலா கமத்துவிதி வழுவா தாற்றிச், சோகமிழ்த் தரும்பழைய வினைத்தொடர்பி னழுக்கனைத்துந் துடைத்திட்டானே. (எ௯)

வளமைதரு கோகனத்தின் மாகமதிச் சிவநிசியை மகிழ்ந்து நோற்றுப், பழிவிளைக்கும் பிரமகத்தி பற்றறவே தீர்ந்தபின்னர்ப் பரமன் செய்ய, கழலடைந்து பேரின்பங் கலந்திருந்தான் சிவநிசியைக் கருத்திலுற்ற, வுளமகிழ்வா னோற்றவர்கள் பேரின்ப வீட்டடைவ ருண்மையென்றான். (௮0)

என்றுயர்நை மிசவனத்தி லிருந்தவிருந் தவர்மகிழ்ந்தாங் கிருகை கூப்பித், துன்றுசடை முடிதுளக்கிக் கேட்டுவப்ப விரித்தெடுத்துச் சொல்லினானாற், கன்றுகொடுஞ் சினமயக்கங் காமமெனு மூக்குறும்பைக் கடிந்து நாளும், வென்றிபெறுந் தவஞான நிலையுணர்ந்து கலங்கமின்றி விளங்குஞ் சூதன். (௮௧)

கன்மாடபாதச்சருக்க முற்றிற்று.

விபரீசச்சருக்கம்.

என்றரு மறையுண ரிருடி காடிரி
புண்டா நுதலா னிரவிற் பூசனை
கண்டவன் கதையினைக் கழறக் கேண்மினென்
றெண்டவச் சூதனு முரைப்ப தாயினன். (௧)

பூரினிற் புராதலப் பதிபு ரப்பவன்
போரினிற் றெவ்வர்மெய்ப் புலவு காரியு
மோரியு மருந்தவே லுறைக ழித்திடும்
வீரியன் விபரீச னென்னும் வேந்தனே. (௨)

தன்றடஞ் சிலைகொடு தானுஞ் சேனையுங்
குன்றருங் கானிடைக் குறுகி நாடொறும்
வன்றலைக் கேழன்மான் மரைபுல் வாய்களின்
மென்றசை யருந்திட வேட்ட மாடுவான். (௩)

புலந்தரு பூசுரர் புலைஞர் மற்றுள
குலந்தனி லுதித்தெழில் குலவு மாதரை
நிலந்தனி லவாவுட னேடி நித்தமுங்
கலந்துளந் தருக்கொடு களிக்கு நீர்மையான். (௪)

வேறு.

மதிவளர் பக்கங் கலைகுறை பக்க மதிதொறு மருவுபன் னொன்காந்
திதிகளிற் றுயிலுண் டிறந்துதன் னடியார் சிந்தனைப் படிமுடி வில்லாக்
கதிதரும் பரனை யானிலைந் தாட்டிக் கடிமலர் கூவிளஞ் சாத்தி
விதிமுறை வழுவா துள்ளநெக் குருகி விருப்புட னருச்சனை புரிவான்.

மற்றவன் மனைவி யாகிய குமுத வதியவன் மலரடி வணங்கிக்
கற்றடந் திணிதோட் புரவல விரவுங் கல்வியிற் றிறலினே ரில்லாய்
பொற்றரு விழுது விட்டெனக் கிடந்த புரிசடைப் புனிதனு ரிரவி
லுற்றருந் திடமொண் டியிலொழிந் துளத்தி லுவப்புடன் பூசனை புரிவாய்.

கூனருஞ் சிலைக்கை வேட்டமே னென்னக் குலவிலங் கனைத்தையுங் கொலைசெய், தூனருந் திடுத லொழிந்திலை நிலத்தி லுயர்குலத் திழிகுலத் துதித்த, தேனருங் கனிபர வனிகர்த்தசொற் கணிகைச் சேயிழை யார்முலைப் போகந், தானருந் திடுத றவிர்ந்திலை யிந்தத் தன்மையென் சாற்றுதி யென்றாள். (எ)

என்றவண் மொழிந்த மொழிசெவிப் படலு மிளநகை கோட்டி வே லிறைவன், முன்றவப் பயனு விறப்பெதிர் நிகழ்வா மூன்றுகால

ங்களு மூணர்வேன், றன்றளிக் குலம்பாட் டயர்மலர்க் கோதைச் ச
ரிகுழால் கேட்டியான் முன்னங், குன்றெனு மிஞ்சிப் பம்பையூ நகரிற்
குலாமுக ஞமலியா வுதித்தேன். (அ)

பாலைவென் றமுதை யடுமொழிக் கவுரி பங்கின்வாழ் பம்பைநா யூ
கன்ற, ஞலையங் குறுகிப் பலிக்கிடு மடிசி லருந்துவான் வருந்தியங் க
டையுங், காலையிற் கோயிற் கைவினை யாளர் கடிதெனைக் கடிந்திடக்
கருதி, வேலையில் விடம்போற் கதைகளை குனித்த வில்லொடுங் கல்
லொடுந் தொடர்ந்தார். (கூ)

ஓடினேன் வெருவி யாலயம வலமா யுயிர்பிழைத் தய்குவா னெ
றிக, டேடினேன் காணேன் பலிசொரி பீடத் தின்னயற் சென்றுழிச்
சுருதி, பாடிநான் மறையோர் பழிச்சிட நெய்த்தி பச்சுடர்த் தட்டெடு
த்தேந்திப், பீடுறு பணிமா றினார்தரி சித்தேன் பிறைமுடிப் பிஞ்ஞ
கன் றன்னை. (க0)

அக்கணத் தொருவன் சரந்தொட வீந்தே னன்றிராச் சிவநிசி யத
னின், மிக்கவா லயத்தை வலமதாய் வந்து விமலனைத் தரிசனை புரிந்
து, நக்கனார் திருமுன் னுவிரீத் திட்ட நன்மையாற் காலமுன் றுணர்ந்
து, தக்கவாழ் வுடனு னிலம்புரந் தருளுந் தலைவனுத் தனாதனி லுதித்
தேன். (கக)

இந்நகற் பகத்தைத் தந்தது பரம னிரவெனக் கருதியா னென்றிர்ந்
து, வந்தகற் றினங்க டொறுங்கலை நிறைந்து வருபிறை குறைபிறை ய
தனிற், றந்தபன் னுன்காம் பக்கமென் றுரைக்குஞ் சதுர்த்தசி களிற்று,
வ ருமம, லந்திவா னதிச்செஞ் சடிலவா னவனை யகத்தில்வைத் தருச்ச
னை புரிவேன். (கஉ)

புரிந்தபூ சனையாற் பிரிந்தவெம் பாவம் போகுமோ வெனப்புகன்
றனையேல், விரிந்தபைப் பணிப்பூ ணணிந்தருண் முக்கண் விமலனை வ
ழிபடி வினஎ்முன், சொரிந்தவெம் பனிபோற் கொடுஞ்சிகைத் தழுன்
முன் றெருக்குறச் குவித்தவிந் தனம்போற், கரிந்துநீ றாகும் பரமனை நீ
யும் வழிபடக் கருதுகா ரிகையே. (கங)

எனவெடுத் திறைவ னியம்பலுங் கதிர்கா னெழின்மணிக் கலன்
கிடந் திமைக்கும், கனதனக் குமுத வதியெனும்மணங்கு னகதொழு தெ
னதமுற் பவமு, மனமுறத் தெளிந்து சொல்லுநீ யெனவும் வனந்தரு

மல்லிகார்ச் சுனத்திற், சினகரத் திருக்கு மென்சிறைப் புறவாச் சென்றுறித் திருந்தனை முன்னாள். (௧௪)

இறந்தமுற் பவத்திற் செந்நிறத் தசையொன் றெடுத்துவாய்க் கவ்வினீ வரலுஞ், சிறந்தவெங் கழுகொன் றுனைத்தொடர்ந் திடவச் சிவாலயங் தனைவலஞ் சூழ்ந்து, பறந்தனை வந்து விடைவரை கொடிக்கம் பத்திடைப் பயந்தொளித் திருப்ப, மறந்தரு கங்கங் கொத்திவா யலகால் வதைத்திட வாங்குயிர் மடிந்தாய். (௧௫)

சொல்லுமக் கங்கம் புறவதா நின்னைத் தொடர்ந்துகொன் றிடுஞ் செயல் சொல்லில், வல்லினில் விழைவி னீகொடுவந்த வசைபடு தசையினை வவ்விச், செல்லுவ னென்று வந்துனை வலிதிற் செகுத்துநின் வாய்ப்படுந் தசையைக், கல்லெறி விளாவி னப்புறங்கொண்டு போனதக் கடுஞ்சிறைக் கங்கம். (௧௬)

நீவிழி யெருவை தொடர்ந்திட வந்தச் சிவாலயந் தனைவலம் வரலா, லாய்விழிக் கொன்றைத் தொடைபுனை சடிலத் தண்ணலன்முன் றுவிநீத் ததனாற், பாய்திரை யுடுத்த நெடுநிலப் பரப்புப் பரித்திடும் பார்த்திவன் மகளாத், தூயசெங் கமலத் திருமக ளென்னத் தோன்றியென் றுணைவியு மானாய். (௧௭)

வேறு.

என்றிவை கூறக் கேட்ட வேந்திழை யெழுந்து போற்றி
நன்றிதென் றிறும்பூ தெய்தி நலனுடை நீயு நானு
மொன்றிமுன் னெடுத்த காயத் தற்பவ முரைத்தாய் யாங்கள்
சென்றினிப் பிறக்குந் தன்மை செப்புதி தெரிய வென்றாள். (௧௮)

மென்னடை யன்ன மன்னாய் வேறினி யிரண்டாஞ் சன்மம்
பன்னக வேந்த னேந்தும் பார்மிசைச் சிந்து நாட்டின்
மன்னவ னுவன் யானீ சஞ்சயன் மகளாத் தோன்றிக்
கன்னலந் தருமென் றோளிற் கலந்துறைக் களித்து வாழ்வாய். (௧௯)

படியிலோர் மூன்றாஞ் சன்மம் பகர்சவு ராட்ட நாட்டில்
வடியயிற் சுடர்வே லேந்து மன்னவ னுவன் யானீ
கடிமதிற் கலிங்க நாட்டிற் கலிங்கர்கோன் மகளாத் தோன்றி
யிடிமுர சதிரும் வாயி லென்மனைக் கிழத்தி யாவை. (௨௦)

மருவோரு நான்காஞ் சன்மம் வளங்கொள்சௌ ராட்ட நாட்டிற்
றிருவள ராசனுக்கோல் செலுத்துவன் யானீ சிறப்

பொருதரி யுலவா வெல்லு மகதர்கோன் புதல்வி யாகிச்
சுருதிவண் டிமிரும் பைந்தார் சூட்டியென் றுணைவி யானை (உக)

சிறந்ததோ ரைந்தாந் தோற்றந் திகழிய லவந்தி நாட்டிற்
பிறந்தர சளிப்பன் யானி பேருல கனைத்தும் போற்ற
மறந்தரு வடிவேற் றானைத் தாருணன் மகளா வந்தெ
னறந்தரு மனைவி யாகி யிருப்பையங் களவில் காலம். (உஉ)

முருந்துறழ் முறுவன் மானே மூவிரண் டாம்பி றப்பிற்
பெருந்தமி ழுருத்த நாட்டிற் பேர சளிப்பன் யானி
யிருந்தவப் பலனால் விஞ்சும் யாதிதன் மகளாத் தோன்றி
யருந்தவத் திருமா றொத்தெ னம்புய மதனிற் சேர்வை. (உங)

சழிதரு மேழாஞ் சன்மங் கைத்தவன் குலத்திற் றோன்றி
யெழில்பெறு பதும வன்ன னெனும்பெயர் பெற்று வாசம்
பொழிமலர்ப் பைந்தார் வேம்பின் பூந்தொடை புனைந்த நாளும்
பழிபவம் பயிலா வண்ணம் பாண்டிநா டளிப்பன் யானே. (உச)

நீயுமப் பவத்திற் செல்வ நிறைந்திடும் விந்த நாட்டிற்
காயும்வெங் கதிர்வேன் மன்னன் கண்ணெனக் கதிர்கொண் முத்த
மேயும்வெய் மருட்டு மென்றோள் வசுமதி யென்னு நாமந்
தோயுமோ ரணங்கா வந்து தோன்றிநீ வளர்வா யுன்னை. (உரு)

மங்கல முரச மார்ப்ப மன்றல்செய் தளிப்பா னுன்னிச்
செங்கதிர் மணிசர் வேய்ந்த செம்பொன்மண் டபஞ்சோ டித்துத்
துங்கவேற் கானுந் றனைத் தூதரி லோலை போக்க
வங்கண்வந் தெய்தம் வைவே லரசரை யறையக் கேட்டி. (உசா)

கொண்டல்கண் படுக்குஞ் சோலை குலவயோத் தியர்தங் கோமான்
வண்டலம் வருந்தண் பைந்தார் வலையுங்காந் தார மன்ன
னெண்டலத் தரசர் போற்று மிருப்பதன் றுருப தேயன்
விண்டலத் தமரர் போற்றும் விறலுடை யவந்தி வேந்தன். (உஎ)

பல்லவ தேய மாளும் பார்த்திவன் பன்னுந் தொன்னூல்
வல்லவன் யானைத் தானை வாரணை வாசி மன்னன்
வில்லவ னாரின் மாலை மிலைந்திடு கேரி வெற்பன்
நல்லொளி முடிசேர் மன்னர் நன்மணச் சாலை நண்ண. (உஅ)

யானுமங் கெய்த நீயன் றிசையனி முரன்று பாடுந்
தேனுமிழ் மலர்ப்பைந் தாரொன் றிண்டிறற் றோளிற் சூட்டி.

பானுவின் குலத்தோர் மூன்றும் பார்த் திவரனேக ரீண்டி
யூனமிழ் படைக ளேந்தி யுருத்தென்னோ டியுத்தஞ் செய்வார். (உகூ)

அங்கவர் தம்மை யெல்லா மாடல்வெங் கரிக்கூட் டத்தோர்
சிங்கம தென்ன வென்று சேயிழை யுனையான் கொண்டு
சங்கமா முரசு பம்பை தழங்கிட வானில் வாழும்
புங்கவர் பரவுங் கூடற் புரிதனிற் புகுந்த பின்னர். (ஙo)

அளப்பருங் கால மன்போ டாயிழை நீயு நானு
முளப்படும் போகந் துய்த்திட் டுலகொரு குடைக்கீ ழாண்டு
வளப்படு மகங்க ளாற்றி வளநிதி மறையோர்க் கீந்து
களப்படுங் கறையி னான்றன் கனைகழல் பூசை செய்து. (ஙக)

வள்ளைவார் குழைதோய் கண்ணாய் மழகளி றென்ன வாங்கோர்
பிள்ளையாம் பெறுவ மன்னோன் பெருங்கலை யுணர்ந்து தம்பி
தள்ளையார் கடுக்கை மாலைக் கடவுளுக் கடிமை பூண்டு
வெள்ளைவான் மதியம் போல வளர்ந்துபேர் விளங்கு நாளில். (ஙஉ)

அணிகெழு செழும்பொற் சோதி யவிர்மணி முடியுஞ் சூட்டி
மணிமுடி யரச னேர்ந்து மாநில மவன்பா லல்கித்
தணிவருஞ் சனன மென்னுந் தழலினுங் கொடிய வெய்ய
பிணிகெட வேட்கை யோடும் பெருந்தவ மியற்ற வெண்ணி. (ஙங)

தென்றலங் கன்று சந்தச் சினைமலர் வாசம் வீசுங்
குன்றமர்ந் தினிது வைகுங் குறுமுனி குறுக நம்பா
மன்றலங் கோதை நீயும் யானுமாய் மருட்சி நீங்கி
யன்றவன் றன்னை நோக்கி யருந்தவ முழப்ப நின்றேம். (ஙச)

அரியநற் றவஞ்செய் காலை யகத்திய னெமக்கு ஞானத்
துரியநற் சிவயோ கத்தை யுவந்துப தேசஞ் செய்வா
னெரிசுடர்ப் பிழம்பா மேனி யெந்தையைச் சிந்தை தன்னிற்
றெரியவவ் வியோக நின்று சித்தியர் முத்தி சேர்வேம். (ஙரு)

நவமிகு பம்பை நாட்டி னுரு வெடுத்து முன்னாட்
சிவநிசி தன்னி லீசன் றெரிசனங் கிடைத்த பேற்றாற்
பவமகன் றய்ய நன்மை பலித்தது பாவை நீயுந்
தவமதிவ் விரதந் தானே தவறிடா திழைத்தி யென்றான். (ஙசா)

ஒருவருந் திங்க ளோறு முபயபக் கத்தி லுற்று
வருசதுர்த் தசிக டோறு மழுவலான் றன்னை வாசந்

தருமலர் கொடுபூ சித்துத் தணந்தெழு பிறப்பு நீங்கி
யிருவரும் பொருவி லாப்பே ரின்பவீ டெய்தி னரால். (௧௭)

சிவன்றிருக் கோயின் மேவிச் சிவநிசி விரதந் தன்னிற்
சிவன்றனைத் தெரிசித் தோருஞ் சேருவர் முத்தி யென்றே
சிவன்றனை யுணர்ந்து நாளுஞ் சிந்தைசெய் முனிவர் கேட்பச்
சிவன்றனக் கடிமை பூண்ட சூதன்முன் செப்பி னானே. (௧௮)

விபரிசச்சருக்க முற்றிற்று.

குபேரச்சருக்கம்.

ஓதமூற் றிடுபொற் கடலடுக் களக்க ணமைத்தவர் லோசன முருந்து, மாதனற் சங்கக் குழையணி காத னகைத்தமுப் புரமெரித் திடுநா ளென், மாதனு வெனப்பொற் கிரிகுழைத் தேறும் வசுந்தனாத் தேர்சனி கடவுஞ், சூதனுக் கிணையாஞ் சூதன்மற் றின்னுஞ் சிவநிசிக் கதை தொடுத் துரைப்பான். (௧)

முத்தவெண் மணிதோ டரித்தநூல் வடத்தின் முறைமுறை குறைவறக் கோத்து, வைத்தெனச் சிதறி விரிந்தபூம் பாளை மரகதக் கமுகினிற் குலையைத், தூய்த்தலை கடுவன் பாய்ந்துராச் சிந்தச் சுரிமுகக் கூன்பிடர்ச் சங்கங், கைத்தலத் தெடுத்துக் கம்பள மெறிந்து கடிந்திடுங் காம்பிலி நாடு. (௨)

கயமலர் துவைத்துக் கனைதவழ் பணிலங் கான்றிட்டத் தோன்றுநித் திலத்தை, முயன்மதிப் பிள்ளை யெனப்பகற் காவி முகைமுறுக் குடைந்தே னொழுகும், வயன்மருங் கெழுந்த கரும்பினைக் கவரி முறித்திடத் தெறித்தவெண் மணிமுத், தயன்முதிர்ந் திடுசூற் றவளைமேற் றடந் தொறுந் தாங்கது பொறுத்திடத் தாற்றும். (௩)

இலைதலை விரிந்த நெட்டுடற் பூக மேற்றவொண் டாற்றிளங் கதலி, யலைதலைத் தவிராத் தூங்குதீங் கனிசே ரம்பிர மனற்பொறி சிதறு, முலைமுகத் துருக்கிப் பழுத்தபொற் சுளைக ளூற்றமுட் குடப்பழப் பனசங், தலைவளை குலைச்செஞ் சாலிகள் வயலின் றலைத்தலை தழைத்தநின் றோங்கும். (௪)

இரும்புகாய்ந் தொத்த செக்கர்வா னெழுந்த விளமதிக் குழவியை யனிகள், விரும்புபூ மலர்த்தா தினைச்சிறு நுதலின் வெண்டிருநீறென

சாத்தி, யரும்பெனுங் கலசத் தூறுநறு நெய்வார்த் தடர்சினைத் தொட்டில்வைத் தசைத்துச், சுரும்புதா லிசைப்ப மென்றளிர்ச் சாலை யழிற்றிடு வளர்த்திடுஞ் சோலை. (ரு)

இனையன வளங்கூர் திடுநெடு நாட்டி லிருங்கலைத் துறையெலா முணர்ந்தோன், வினைதுழா யலங்கற் கண்ணனு மறியா மலரடி வந்தனை புரிந்து, நினைவருங் காம முதலமுக் குறும்பி னெடும்பகை கடிந்துநீ ணிலத்திற், றனைநிக ரான சுத்தநல் வேள்வி தத்தனென் றுளனொரு மறையோன். (சூ)

அன்னமா மறையோ னைம்புலப் பகைசெற் றுற்றிய வருந்தவப் பேற்றாற், கன்னல்வே ளனவோர் நன்மகப் பெற்றான் கருதருங் குணநிதி யவன்பேர், முன்னமுந் நூலின் வினைவிதி முறையின் முடித்தபின் முதுச்சுருதை வுடையோ, னுன்னருஞ் சுருதி முதற்கலை பயிற்ற வேட்கிநூ ளுளத்தினுற் றுணர்ந்தான். (எ)

தூமமார் திருண்டு சுருண்டுநீண் டிமைக் கரிகுழற் றோகையர் மருண்டு, காமனு மெனக் காமுறு பருவ முற்றபின் கற்றைவெண் கதிர்கால், சோமனு ளைப்பான் முதனவக் கிரகஞ் சுகம்பெற முகூர்த்தநன் றுனோர், வாமமே கலைப்பொற் குலக்கொடி தன்னை மறைப்படி வதுவைசெய் திட்டான். (அ)

வேறு.

இன்பமுற் றன்னை தந்தை யில்வயி னிருக்கு மந்நாள்
மன்பதை மதிக்குஞ் சீர்த்தி வளர்குண நிதியா மைந்தன்
புன்புல மீதூர்ந் தூழின் பொறித்திடு விதியின் செட்பாற்
றுன்பமும் பகையு நல்குஞ் சூதின்மேன் மனம்வைத் தானே (கூ)

அற்புள னைய தந்தை யறிவுறா வண்ணங் கல்விச்
சொற்பயி லாதா ரோடு துன்னிவெவ் வாகந் தன்னி
னற்பக லிரவெப் போது நன்மதி மருட்சி கூர்ந்து
பொற்கலன் கலைபொற் காசு பொருதுநா டோறுந் தோற்பன். (க0)

தனையன்யாண் டுற்றா னென்று தந்தைகேட் டிடும்போ தெல்லா
மனைமிக வெருவி யோதற் ககன்றன னென்று தீய
வினையமதான சூது மறைத்தனள் விளம்ப முந்நூல்
வினைதரு மார்பன் சற்று முணர்ந்திலன் வாழு நாளில். (கக)

ஆய்மகன் றன்னை வாவென் றழைத்துநீ யிழைக்கு மிந்தத்
தீயரு துர்ந்த தேரி னுனையுமிங் கெனையுஞ் சீறிக்
காய்வனென் றுள்ளத் தஞ்சிக் கவறுக டவறு செய்யுந்
தாயனீ யாடுஞ் சூது தனையொளித் துரைத்தேன் முற்றும். (௧௨)

உந்தைதன் னொழுக்க நீதி யுணர்ந்திலை யந்த ஞளர்
மைந்தர்க ணடக்கை கண்டு மதிக்கிலை யென்று மாழ்கிக்
கந்தமைக் குவளை வாட்கண் கலுழ்ந்தவ ளுரைக்கு மாற்றஞ்
சிந்தையிற் கொள்ளான் வஞ்சக் கணிகையர் திறத்திற் சேர்வான். ()

வாட்டடங் கருங்கட் ரூளை மகளிர்மேன் மனம்வைப் போரைக்
கோட்டரு கள்ளு நாளுங் குடிப்பவர் தம்மைக் கூடி
யீட்டரும் பொருளை வாவுற் றிருங்கவ றாடுவோனை
வேட்டமேன் மனம்வைப் போரை யாவரே விலக்க வல்லார். (௧௪)

இளையவர் மையிலு னென்று மிசைந்துளா னில்லி னோர்நா
ளனைதுயி லமைய நோக்கி யத்தன்முன் னவள்பா னல்கும்
புனைமணி யாழி தன்னைப் பொருக்கெனத் திருடிப் போகி
வினையவெங் கவற்றி னாடித் தோற்றனன் வேறொன் றில்லான். ()

அந்தமோ திரத்தைக் கையி லணிந்துளா னொருவன் றன்னைத்
தந்தையாம் வேள்வி தத்தன் றனித்தொரு மறுகிற் கண்டு
சிந்தையிற் கவலை கூர்ந்து தெளிந்தபின் னறிவ னென்றுஞ்
சிந்தமா மணிப்பொன் னாழி யாருனக் கீந்த தென்றான். (௧௬)

அரவின்மேற் கிடந்த வையத் தமரர்கள் பதியே யானுங்
கரவினிற் கொண்ட தன்றுங் காதல்கூர் மைந்தன் சூது
பொரவிருப் புடையோ னென்றென் புட்டகம் வெஃகு னின்றிவ்
விரன்மணி யாழி தோற்றான் மேவுவ னுளை யின்னும். (௧௭)

ஓதுநூற் கலைவல் லாய்நின் னொருமகன் விலையி லாமென்
போதுபோற் கோசி கஞ்செம் பொன்புனை கலன்கள் யாவுஞ்
சூதுபோர் பொருது நாளுந் தொழிலிது வாகத் தோற்பா
னீதுநீ யுணராய் போலு மென்றவ னெடுத்துக் கூற. (௧௮)

கன்னபா கத்திற் காய்ந்த கதிர்நுனிச் சலாகை யிட்ட
தென்னவெங் துருகி யிற்பா லெய்தியில் லவளை நோக்கி
யுன்னதா ருயிரொப் பான புதல்வனெவ் வுழையி னுற்ற
னென்னமற் றவனீ ராட நீர்த்துறை புகுந்தா னென்றான். (௧௯)

என்னனு மென்ன லுன்பா லெண்ணெயாட் டயர்போ தீந்த
வன்னநன் மணிப்பொன் னாழி தருகென மறையோன் கேட்பத்
தன்னவிற் கனிந்த மூரல் பகற்கடன் கழித்துத் துய்த்த
பின்னர்யான் றருவ லென்று பெட்புறப் பேச லோடும். (உ0)

நெறியில்பொய் புகன்று கற்பி னிரல செய்தாண் மைந்த
னறிவில னாகி வெஞ்சூ தாடியே படிற னானான்
குறியுடைப் பெரியோர் நூலிற் கூறிய நீதி நோக்கிற்
பொறியிலா விவனை விட்டுப் போவதே கடனென் றெண்ணி. (உக)

பற்றொரு சற்று மின்றிப் பாசிழைப் பவளச் செவ்வாய்ப்
பொற்றொடி தனையும் பெற்ற புத்திரன் றனையு நீத்தன்
றற்றொரு பதியி னெய்தி யுயர்குண வேள்வி தத்தன்
மற்றொரு மடந்தை தன்னை மணவினை முடித்து வாழ்ந்தான். (உஉ)

இந்தமா நிலத்தி லிந்நாள் யான்புரி தவறு கண்டு
தந்தையுங் கன்னை யோடென் றன்னையுந் துறந்தா னென்று
சிந்தையிற் கவலை கூர்ந்து செய்வதொன் றறியான் மைந்த
னந்தமி றுன்ப வேலை யாழ்ந்தனன் கரைகா ணானாய். (உ௩)

கற்றிலேம் பொருள்க ளீட்டுங் கல்விக ளொழுக்க மேன்மை
பெற்றிலே மஞ்ச லென்பார் பிறரொவ ரொருவர் பாலும்
பற்றிலே மற்று முள்ள பாசனத் தோர்க ணட்புந்
தற்றிலே மென்று மாழ்கிச் சலிப்புட னிருக்கு நாளில். (உ௪)

அரனிர வதனி லீச னாலயந் தன்னி லோர்விப்
பிரனுயர் பூசை செய்யச் செல்லுவான் பின்ன ரெய்திக்
கரவினி லமலற் கேற்ற மமுதினைக் கவர்ந்து மீள்வா
னிரவினி லற்ற நோக்கி யிருந்தனன் றுயிலி லாமல். (உ௫)

எரிபெரும் பசியி னோடங் கியநுயமோர் நான்கும் பூசை
புரிதர நோக்கி வைகி வைகறைப் போதா தன்னி
லரியநல் விரத மாற்றி யமலனை யருச்சித் தேத்தித்
துரிசறு மறையோன் கண்க ளேங்கியே துயிலக் கண்டான். (உ௬)

ஆண்டவ னெழுந்து போகி யமுதினை யெடுப்பக் கண்ணிற்
காண்டல்செய் யாது மங்குங் கனைசுடர் விளக்கைக் கையாற்
றாண்டலிசெய் தீசன் முன்னர்ச் சோற்றினைக் கவர்ந்து கொண்டு
மீண்டொரு மறையோன் காலில் விலொந்தனன் மிதிக்க வுற்றான். ()

மிதித்தவப் பொழுதி லந்த வேதியன் விழித்து நோக்கிக்
கொதித்தனன் கள்வ னென்றே கூக்குர லெழுப்ப லோடுங்
கதித்தவெந் திறலி னோரக் கடிநகர் காப்போர் கேட்டங்
கதிர்த்தனர் வந்து பற்றி யவன்றலை யறுத்திட் டாரால் (௨௮)

வேறு.

அவ்வேலையி லிகலந்தக னடல்கொண்டிடு தூதர்
கைவேலயி லவியஞ்சிலை கணைவெங்கதை கொண்டே
மைவேலையில் விடமென்றிட வந்தங்கவ னிருதோ
ளைவேதர விசித்திர்த்தவர் நடைகொண்டது கண்டே. (௨௯)

கடுவெங்கரி யுரிகொண்டகண் ணுதற்றன்கண நாதர்
வடுவின்றிய மணிதுன்றிய மானத்திடை வந்தே
விடுமின்க ளிவன்றன்னை யெனச்சென்று விலக்கக்
கொடுசென்றிடு நமதூதர் குறித்திங்கிவை சொல்வார். (௩௰)

பொருடங்கிய மறைவாண ரொழுக்கம்புற நீத்திட்
டருடங்கிய வவைசொற்றவை யறிவின்றி முனிந்து
மருடங்கிய குகாடிநல் விலைமாதனை மணந்து
கருடங்கிய மனத்தான்சிவ னிருமாலியங் கவர்ந்தான். (௩௧)

உய்யும்வகை யெதிங்கிவ னுறுமிப்பவ மதனிற்
செய்யுந்தவ மூன்றோவெனச் சிவகங்குலி னுதாம்
பெய்யுந்தழ லிர்வெம்பசி பெரிதாயெழத் துயினீத்
தெய்யுங்கலை யதனச்சுடு மிறைதாளிணை கண்டான். (௩௨)

அடல்சேர்விடை யுடையானொளி ரவியுஞ்சுட ரதனை
மடல்சேர்மலர்க் கரத்தாலொளி வரத்தூண்டின னதனான்
இடல்சேர்கொடு வினையாவையும் வீத்தான்றுயர் நீத்தான்
கடல்சேர்நெடு நிலமீதுயர் கலிங்கத்திறை யாவான். (௩௩)

என்றேசிவ கணநாத ரியம்பச்சமன் றூத
ரன்றேயவ ரடிபோற்றிநின் றருள்சேர்குண நிதிதோட்
குன்றேய்பிணி யவிழ்த்தாங்குநீர் கொடுபோமென விடுத்துச்
சென்றேபுலிக் குழுவன்னவர் தென்றிக்கினி லுற்றார். (௩௪)

வேறு.

ஈச னன்பரக் காலையிற் குணநிதி யென்பவன் முகநோக்கிக்
காச னிந்தபொன் முடிதரித் துயர்புகழ்க் கலிங்கநா டளிக்கின்ற

வாச மாலிகை யருந்தமன் மதலையா வளங்கொளுத் தமனென்னு
மரச கன்றபே ரொடுபிறந் திடுதியென் றறைந்தன ரகல்கின்றார். ()
அனைய னப்படிக் கலிங்கநாட் டிறைமக னாகிமுற் பவந்தன்னிற்
றனையு ணர்ந்துறத் தொடர்முதுக் குறைவினாற் சங்கரன் குலந்தோ
கனைசெ ழுஞ்சுடர் நெய்விளக் கேற்றிநற் கடிகமழ் நறுந்தூபம் [றுங்
புனையு மரமலர் சாத்தியே யருச்சனை புரிந்தறம் பலசெய்தான். (௬௬)
இன்ன வாறுபற் பலதினந் தருமங்க ளியற்றியா யிரஞ்சென்னிப்
பன்ன கரிதிபன் சுமந்தபார் புரந்துநீர்ப் பட்டழிந் திடுமொக்கு
வன்ன மானுடச் சட்டைநீத் துத்தரத் தளகைமா நகர்காக்கு
மன்ன னாகிவீற் றிருந்தனன் யாவரும் வந்தடி தொழுதேத்த. (௬௭)
சிலப கற்கழிந் திட்டபின் றெண்டிரை திரியா நதிசூழ்ந்து
மலமி தந்தருங் காசியிற் சிவலிங்க நாட்டியர்ச் சனைசெய்தா [ன்
னிலகு பேரொளிச் சுடர்ப்பிழம் பாய்ச்சசி யிருத்திய சடைப்பெம்மா
கலத வாள்விழி மலைமக ளோடுமக் கணத்தினில் வெளிப்பட்டான்.()
உன்ன ருந்தவம் வியந்தனர் தனைதகின் றுளத்தினில் விருப்புற்ற
தின்ன தென்றுரை தருதியென் றுரைத்திட விரவியா யிரங்கோடி
துன்னு ருக்கதிர் விரித்துமின் றனையமெய்ச் சோதியுந் றுருக்காண
வன்ன லந்தரு கண்மணியினை கூடிடா நல்வரந் தருகென்றான். (௬௯)
கரக்கு மாலயன் காணுறா வடிவவன் கட்புலங் கதுவுற்ப
நோக்கு மாறருள் செய்தனன் றழலுமிழ் நுதல்விழிப் பெருமானும்
பூக்கு மாமலர் மணமெனப் பொருந்திய புனிதையோ டெழுந்தன்று
நீக்கு மாறரி தாவுறை நிமலையைப் பார்த்திது நினைக்கின்றான். (௭௦)
தீது தீர்த்தருள் சிவன்றிரு மேனியிற் சேர்ந்துறைந் திடமுன்னாள்
யாது நற்றவ மியற்றின ளிவளென வெண்ணிநோக் குறவெற்பின்
மாது வங்கறுத் திட்டன ளோர்விழி மறைந்ததங் கவற்கங்கா
ளோது மாமறை யளவிடற் கரியவ னுமையவட் கிவைசொல்வான்.()
வேறி னின்றவப் பெருமையை வியந்துளத் துவந்தன னினைக்கின்றான்
வேறி வன்புரி தவறிலை முனியலை விழியினிற் கருளென்ன
சீறி வெம்பொறிக் கனலெனக் கனன்றுதன் சிந்தையுற் றெழுங்கோப
மாறி யம்பிகை யம்பகம் வழங்கினள் பொற்கண்ணாய் விளங்கிற்றால்.()
விழியி ழந்தது பெற்றபி னியக்கர்தம் வேந்தனும் வியப்போடவ் [க்
வழியி னம்பிறை முடித்தருள் சடாடவி யுடைவிடைக் கொடியோனை

கழிவ ருங்கயன் மருட்டுவாட் டடநெடுங் கட்கவு ரிமையேவரி [ருண.
பொழிசெ ழுந்துண ரிறைத்துநற் றுதிபல புகழ்ந்துவீழ்ந் தெழுகின்
மன்று ணாட்டமே புரியரன் கைகளான் மற்றவ னுடலைவந் [பொற்
றின்று தொட்டுநீ யென்னுடைத் தோழனு யிருத்தியென் றிசைத்தரன்
குன்று கிட்டிய தனதிப் பெருக்கொடு குலவுபுட் பகம்பெற்றே
யன்று தொட்டவ னளகைமா நகரா சளித்தவ ணிருக்கின்றான். (சச)

இப்ப மார்சிவ நிசியினின் மாலிய மெடுத்தருந் திடற்கிசன்
முன்ப விற்றிடு விளக்கினைத் தூண்டிய முற்பய னதனாலே
நன்பு வித்தல மாசளித் தளகைமா நகர்தனக் கிறையாகிப் [ன். (சரு)
பின்ப ரன்றனைப் பிரிந்திடாத் தோழமைப் பெருமையும் பெறலுற்றா

சேற்றி னாரசெழுந் தாமரைக் கண்ணனுந் தேடருஞ் சிவன்மெய்யி
னீற்றி றன்றிருக் கோயிலி னுயர்சிவ நிசிகளி னெய்த்தீப [ண்க
மேற்றி னார்பெறும் பேற்றினை விரித்தெடுத் தியம்பவேண் டிடினெல
னூற்றி சாமுகம் படைத்தருள் விரிஞ்சனு நவின்றிடற் கரிதாமால். ( )

அன்றி யெண்ணிரண் டாமுப சாரத்திற் கடுத்தவை யங்காலிற்
குன்றி யத்துணை யியினு மாயிர கோடியாய்ப் பலனல்கு
மென்றி ருட்குறும் பறவெறி கணைசுட ரிரவிசெங் கதிரொன்னத் [ன்.
நன்றி ருஞ்சடைத் துறவர்கேட் டுவப்புறச் சூதனுண் டுரைசெய்தா

குபேரச்சருக்க முற்றிற்று.

சாலிகோத்திரச்சருக்கம்.

கழனிமலை கயல்கள்வள்ளைக் கொடிகுதிப்ப தெனக்குழையாய் கருங்கட் பைந்தார்க், குழலிமலை நிலையமுத மணமிறைவாய் கமழ மூத்தங் கொடுப்பேரன் போர், பழனிமலை கடக்கரிதேன் றருக்கனு ளாங் தடுமாறு வவுணர்க் கொன்ற, பழனிமலை குடிபுகுந்த பகவனிரு சரணமலர் பரவி வாழ்வோம். (க)

அங்கிரப் பிருகுவிட பன்றநீ யெத்திரிகா சிபன்சு பேதன்
பங்கமில்வான் மீகிசர பங்கன்சா பாலியருட் பரத்து வாசன்
றுங்கமுறு புலத்தியனற் சுசீலனு ரதன்மரிசி சுகன்மார்க் கண்ட
னெங்குமிசை பெறுசனகன் முற்கலன்முற் படுமுனிவ ரியர்கள் யாரும.

பாட்டளிக்கும் துவளிக்கும் பசுந்துளவோன் முதலமரர் பல்லோர்யார்க்குங் கேட்டளிக்க வருங்கவுண் டவனருள்சேர் சூதன்முகங் கிளர நோக்கிப் பீட்டளிக்குந் தவமுனிவ சிவகிரிகோத் திரர்க்கிறந்த பின்பே யின்ப வீட்டளிப்ப தன்றியிகம் விழைந்தனவு மளிக்குமோ விளம்பு கென்றார்.

அரவுமதி முடித்தசடை யரனிரவிற் கண்படைநீத் தருச்சித் தான்ல் குரவுதுகள் படுத்திநெடு நிலத்தின்மிகு செல்வமெல்லாங் கொடுக்குமைந்தாய், விரவுகொலை முதற்பாவ வல்வினையின் வேர்பிடுங்கி வீடுநல்கும், பரவுமிதி னிகழ்காதை யொன்றுளதென் றுயர்சூதன் பகர்வதானான். (௪)

காலிகோத் திரத்தியல்பிற் புரந்தருளுங் கண்ணன்முதல் கருதற் கொண்ணாச், சூலிகோத் திரத்தவர்கொண் டெயிலொருமூன் றழற்கவிழ்த்த தொல்லோன் றிங்கண், மோலிகோத் திரவருளே பெறவேண்டி யிறையுமன்ற முறையி னின்றோன், சாலிகோத் திரனெனப்பேர் தரித்துண்டயா னொருவனுளன் றவத்தின் மிக்கோன். (௫)

வேதியர்தங் குலத்திறுயர் விண்மணிகண் மணியெனவே விளங்கும் வேத, வோதியுணர்ந் தறிவரிய கலைக்கடலின் கரைகடந்திட் டுயர்நூல் வல்ல, வாதியரை வென்றுசந்தி வந்தனைகண் முப்பொழுதும் வழுவா தாற்றிச, சாதிமுறை தவறும னீதியுடனெடுந்துதினஞ் சரிக்குநாளில். (௬)

வம்பவிழுங் குழன்மனைவி மக்கள்சுற்ற முதற்குபெய்ய மலியநாருந், செம்பவள விதழ்க்கமலை திருக்கடைக்கண் ணோக்கமின்றிச் சிறுமை யெய்த, வெம்பாம னருளிதுவோ வென்செய்வே னென்னமனத் தெண்ணித் தென்பாற், கும்பமுனி யானிருக்கு மிடந்தேடிச் செல்வனெனக் குறித்துக் கொண்டே. (௭)

தடங்கரைகொண் டிரங்குறைந்து ருட்டியெறிந் திடும்பெருநீர்ச் சலதி யேழுங், குடங்கையினிற் கொண்டுமுதற் குடித்த முனிவனடி குறுகிப் போற்றி, விடங்கலுழ்ந்த பணிவாயி லகப்பட்டேனென் றுமென்ன மிடிவாய்ப் பட்டேன், றிடங்கொள்ளக் தேறியும் படியடியேற் குனதருட்கண் செய்தி யென்றான். (௮)

அத்தவனு முளத்தருள்கூ ரந்தணனை முகநோக்கி யவனிமீதிற், றீங்ககற்றுஞ் சிவகிரிகோத் திடில்வறுமைப் பெருங்கடலின் றிரங்கரையாய், பூங்கமலத் தவனுலகம் புகலரிய போகமெல்லாம் புசித்துப்

பின்னர், நீயுயரிய சிவபதமும் பெறுவாயென் றுறுதியுட் ...ணிகழ்த்தி னானால். (௯)

அனையசிவ நிசிநோற்கு முறைமறையா கமப்படிநீ யடியனே னுக், கினையபரி செனவிரித்தீண் டியம்புகென விருக்குமுன்னு வியம்பும் வேதன், தனையுணருங் குடத்தனைய னவ்விரதந் தனைநோற்குந் தன்மை யெல்லாங், கனைகடலுண் டருடிருவாய் மலர்ந்தவனுட் புலங்களிக்கக் கழறிப் பின்னும். (௰)

பொன்னிலமே வியபுலவர் புகழ்விரத மிதனிலைமை புகலற் பாற்றோ, வெங்கிலமுந் தொழத்தகுநற் றலத்திலிருந் திவ்விரத மியற்ற லாற்றா, னன்னிலயித் தெனவோங்கிச் சின்னாளிற் பெரிதுபய னல்குமென்ன, வங்கிலமு மெனக்கறியச் சொல்லுதிநல் லொதிபயிலுமறிஞ வென்றான். (௧௧)

சிதவனம் பொழியுமிருட் கொண்டறிறங் கொண்டிடு மெய்ச் செய்ய செங்கண், மாதவனம் புயன்றவள வாரணத்தின் வருமகவான் வானில் வாழ்வோர், பாதவன சம்பரவ வுமையாளோ டமையாளும் பரமன் வைகும், வேதவன மென்றுலகி லொன்றுளதங் கதன்றகை யார் விரிக்க வல்லார். (௧௨)

முன்னுருவம் பலவெடுத்து முயன்றுசெய்தீ வினைக்கிழங்கே மூலமாகப், பின்னுநவ மெடுத்துழலும் பித்தருமத் தலத்திறக்கப் பெற்றோ ரென்னிற், பொன்னுருவச் சடாமௌலிப் புனிதன்ற னகப்பிரமம் போதித் தாதித், தன்னுருவந் தருவதனா லத்தலத்துக் கிணைபுகலச் சரிவே றுண்டோ. (௧௩)

பொன்னிமூத லதிப்புநல்பாய் புலவுகமழ் கடற்றீரப் புளினந் தோறுங், கன்னியிளம் பெடையொடன்னங் கலந்துவளங் காட்டுமறைக்காட்டு வேணிச், சென்னித்...ர் மதிமுடித்த சிவபெருமான் சந்நிதியிற் றிருமுன் னாக, வன்னிமட மொன்றுளதாங் கடியர்வினைக் கா...மை துன்னி யாமல். (௧௪)

விண்ணவர்பூ சனைபுரி...ர மறையொழுக்கம் வழுக்கியவே தியர்கோ...டிதோறும், மண்ணவரை வருத்துகின்ற மன்னர்நெறி பிழைத்தொழுகும் வணிகர் மூன்று, வெண்ணவரும் பின்னவர்சங் கரசாதி யரிவையர்மற் றிதரர் ...ரகப், பண்ணவர்கா டெனத்தகுமத் தலமேவும் பொழுதெற் ...ப் பதக ரேனும். (௧௫)

சிறைப்புறமிப் பிறவியெனும் பிணிக்குடைந்தி[illegible]மினது தீர்ப்பன் யாரெனென், றறைபறையிற் கறங்குதிரை மணி[illegible]க்க ணைடந்துகுடைந் தாடிக் கோடித், துறையதனிற் படிந்துமுதற் சுருதிதொட்ட வரிதனிற் ரேய்ந்து தொன்றுான், முறைவழுவா துன்னியனி கன்னிகையிற் றுன்னியர்நீர் மூழ்கி யேறி. (௧௬)

விடமுன்னிய வருமமையத் திமையவர்க்கா வுண்டுவட விண்டு பண்டு, தடமுனியிற் குனித்துநகைத் தெயிலொருமூன் றழற்கவித்த தலைவற் போற்றிற், றிடமுனிய பொருளனைத்துஞ் சித்தியுற முத்தியினுஞ் சேர்வ ரென்றே, குடமுனிவன் கருதிவணப் பெருமையெல்லா மவற்கறியக் கூறிப் பின்னும். (௧௭)

அத்தலமா ரூர்காசி யம்பலமற் றெவற்றினுக்கு மதிக மென்றோ முத்தலமும் புகழவரு முனிவரனை வருமொழிந்தார் மொழியநின்ற, வெத்தலமு மதிக்குமித்தத் தலத்திலிருந் திவ்விரத மியற்றிற் சித்தி, கைத்தலத்தில் வைத்தநெல்லிக் கனிபோலக் காண்டியெனக் கழறிப் பின்னர். (௧௮)

கல்வலனை யதனமலை கங்கையொடு கோதருநு மண்ணிக் கானிற், செல்வலனை வருங்காண வெல்வலருச் சுனையெனச் செயிர்த்துப் போர்செய், மல்வலனை யுளத்திருத்தி மறைவ[illegible]ஞம் வாதாவி மடியச் சீறி, வில்வலனை முனிந்தமுனி விடைகொ[illegible]ப மறைசைநகர் மேவ லுற்றான். (௧௯)

உற்றவனுற் றிகம்புனித தீர்த்தமெல்லாம் படிந்தாடி யுயர்பொற் கோவில், சுற்றிவலம் வந்துகொற்ற [illegible]ரகத்திச் சேதகன்று டொழுது முன்று, மற்றமினுன் மறைநகை[illegible]பா தாலருச்சித் தருளிறைசே வடிகள் போற்றிக், குற்றமில்யா [illegible]ழைப்பழித்த மொழியம்மை நூபுரத்தாள் கும்பிட் டேத்தி. (௨௦)

ஒருபொருளை யுணர்ந்திருக[illegible] பனிதூங்க முப்பெ[illegible] முயர் நால் வேதம், தருபொருளா மஞ்[illegible]ழுத்தை நெஞ்சழு[illegible] புலோர் தலைவன் பாரில், வருபொரு[illegible] ருயிரனைத்து[illegible] படைத்தளிக்குந் தன்மையினன் மண்ணோர் விண்ணோ, ரிருபொரு[illegible]ான் றிருமயன்மாற் கெட்டாத பதம்பெறுவா னிதயத் தெண்ணி. (௨௧)

சிவசிவயாஞ் சதுர்த்தசியிற் றிங்கடொறுங் [illegible]யிலுணவு சிறிதுமின்றித், தவமுயல்வா னிரவிடை வில்வமுடன் கந்தமலர் சந்தஞ் சாந்

திப், பவய ... திரகவின்று பரிந்துநீவே தனம்புரிந்து பாடி யாடி, நவநவமாச் சிவ்பூசை நாலுயா மமுமுடித்து நடத்து நாளில். (உஉ)

குடையை தலைச்சேவற் றுவசனைப்பெற் றெடுத்தவிடைத் துவசன் பொற்று, மேடுடைய பௌக்கமலத் திருத்தியருச் சித்திடுமோ ரிரவி ன்றுப்பன், கோடுடைய கயிலைநடை கொண்டனைய வெள்விடைமேற் கொண்டு கூர்தற், காடுடைய மலைமகளோ டெதிர்நின்றுண் மற்றவன்கண் களிக்க மன்றே. (உங)

பிறைகாட்டுஞ் சடைமுடியும் பிரமரங்கா மருமுன்று பிரசமாந்த, நறைகாட்டுங் கொன்றையந்தா ரணிந்திலகு திருமார்பு நயனமூன்றுங், கறைகாட்டுங் கந்தரமு மந்தரத்தின் புயநான்குங் கண்டு முத்தித், துறைகாட்டுங் கடற்றீரச் சுருதிவனத் திறைவனடி துதித்தல் செய்வான். (உச)

வேறு.

களக்கோலவல் விடமுண்டருள் களத்தாய்கவின் றருஞ்சா
மளக்கோமளத் திருமேனிகொண் மலைமாதின் மணாளா
தளக்கோகன தக்கண்ணினன் றருவேட்டனைக் கடுநீக்
குளக்கோவுடை யானேகுறிக் குங்கோவுடை யானே. (உரு)

கடுஞ்சூகரத் தடிமென்றுறு சுவைகண்டவை யுதவுங்
கடுங்கானவர் குல தோன்றிய கண்ணப்பனை யாண்டாய்
நெடுங்கரய்கனை யெனமால்வரத் துன்றூர்புர முன்றை
யடுங்கார்முகத் தா னையொனாங் தழுகார்முகத் தானே. (உசு)

சம்புக்கினை கினையின்கினை ... றுய்வா மீறேர்
மொய்ம்புற்றிடு கொடிமன் னவன் முன்னேகொடு வந்தா
யம்புற்றான் முடியாய்விற ல ... மடியாய்
கம்புக் ... யானேகடக் கப்புக ... ழ யானே. (உஎ)

...ப் புனல்வைக யயி ...ரிடியுங்கனை கொடியிற்
...ரி மண்கூடை க ...ர்தேய்டி பட்டாய்
...காகிய கொக்கின்சிறை யக்கி
...ரசினை யாரச்சடை யானே. (உஅ)

...னீறுறு கற்பந்தெ...று நல்குங்
...னைந்தாய்வட தருநீழ ...ருந்தாய்

கொலையார்கதி ராழிப்படை கொண்டேசலந் தரனை
மலைமாதிடத் தானேயிம மலைமாதிடத் தானே. (௨௯)

சிலைத்தூண்டனி லுதித்தோங்கிமண் டிலைகத்தேங்கு முன் சிரித்தே
யுலைத்தாண்டபெரன் னிறத்தியவ னுடற்கீண்டிடு மரியை
யலைத்தாங்குயிர் கொளச்சிம்புள தானையி லார்ந்த
தலைத்தானையி லுனேபுலித் தலைத்தானையி லுனே. (௩௦)

பணைப்பாம்பணைப் பரவைக்குநம் பரவைப்பெரு விரக
முணர்த்தாங்கென விடுஞ்சுந்தரற் கொருசந்து நடந்தாய்
மணைப்பூந்துகள் குடைந்தாதிமை லரிவண்டிமிர் மதலைத்
துணர்ப்பூங்கணி யானேதொழுந் தொண்டர்க்கணி யானே. (௩௧)

சுதைக்கும்பகன் முலைமாதனைத் துகடூர்புவிச் சுரனா
லுதைக்கும்பழி தனைமாற்றிடு மணிகன்னிகை யுடையாய்
பதைக்கும்படி யடலார்கொடும் பகரேசமன் மருமத்
துதைக்குங்கழ லானேகரத் தொளிர்பொங்கழ லானே. (௩௨)

சலத்தான்மிகுங் கொடியோனிசை தருவீணையின் கொடியோன்
புலத்தார்கரி யிருகான்குடன் பொருதன்றட்ல் புரியு
முலத்தோடலை நெரிபட்டொ ருட்கும்படி யூன்று
மலர்க்கானகத் தானேதிரு மறைக்கானகத் தானே. (௩௩)

துன்பந்தரு பிறவிப்பிணி தொலையும்படி நிலையா,
மன்பங்கியி னிறுதிட்டென வகநெக்குரு கிப்பூ
நன்பங்கய மிகர்நின்பத நாளுந்தொழு படியார்க்
கின்பந்தரும் பித்தாவர மெனைநீவிரும் பித்தா. (௩௪)

வேறு.

என்றுபல துதிகூறி யானந்தமிகுந்துபுன லிருகண் சோரத், து
ன்றுமயிர்ப் புளகமெழப் பரவசனாய் வீழ்ந்தெழுந்து துள்ளி யாடித்,
தன்றுணைச்செங் கரங்கூப்பி முடியில் வைத்துப் படியினிடை
னை நோக்கிக், கன்றுசினக் கருங்காலனை யுதைத்த பூவெ
கழறு மன்றே.

உவரிவளை நெடுகிலத்தி லுடற்கண்ணிலா கண்ட
ஞ்ஞேன், துவரிதழ்வாய் மனைவி தார் குழமிகு
த்துக் கீற்றைக், கவரிசிலர் பு யிட்டக் கணங்க

ழைப்பக் புவி நீத்துத், தவரிதய மெனவிளங்குங் கயிலைமலை வருதி யெனச் சாற்றுஞ் சோனான். (கசு).

அஃதறமுத லுளகைநகர்க் கதிபதிபோ னீதிபலபெற் றவனி மீதிற், றுன்றுபல போகமெல்லாந் துய்த்துநெடி நாட்கழித்துத் துதித்து வானோர், நின்றுதொழு பதஞ்சலியும் புலிமுனியுங் காணநித்த நிருத்தந் தில்லை, மன்றுதனி லாடியபொற் பூவடிவாஞ் சேவடியின் மருவினானே. (கஎ)

ஈதுமுத லிகழ்காதை யாரேனுஞ் சிவநிசிநோற் றிடுவோர் பேற்றின், கோதுவதெ னூனத்தில்விழைந் தனபெறுவ ருலகமதி னுடலம் விட்டாற், றுதவிழ்பூங் கொன்றையந்தார்ச் சடைமுடியோ னிருசரணஞ் சார்வா ரென்று, சூதமுனி வரன்முனிவ ரனைவருங்கேட் டுளமகிழச் சொன்னான் மன்னோ. (கஅ)

வேறு.

வாழி மாதவர் வாழி மனுநெறி
வாழி மாநிலம் வாழிநல் லானினம்
வாழி நான்மறை வாழி மழைமுகில்
வாழி வைதிக சைவ வழக்கமே. (கக)

யாகமோத்திரச்சருக்க முற்றிற்று.

ஆக கூடிய விருத்தம், எகரு.

சிவராத்திரிபுராணம்

முற்றிற்று.

பிழைதிருத்தம்.

:o:

பக்கம்.	பாட்டு.	வரி.	பிழை.	திருத்தம்.
கூ	உஅ	ச	புயல்	புனல்
,,	உகூ	உ	வேறிலான் கண்ட	வேறிலா னகண்ட
க0	ஙச	ச	கதி	கதிர்
கங	ருசா	க	பிளம்[illegible]கி	பிழம் பாகி
கச	சாஅ	ங	மீறுய்ப்	மீறுப்
கரு	எச	க	உயிக்ர்	உயிர்க்
கஎ	கக	உ	மனோன்மணி	மனோன்மணி
கஅ	கங	உ	பெறுவாரால்	பெறுவாரால்
,,	கங	ங	தாஞென்	தாமொன்
உ0	ங0	ங	வேலை	வேலைத்
உக	ச0	ங	நாலரஞ்	நாலாஞ்
உஉ	சங	ச	றுங்கமுரு	றுங்கமுறு
,,	சரு	உ	உச்சரிதத்தீ	உச்சரித்தீ
உங	சகூ	ங	கொரன்ற	கொரன்ற
,,	ருஉ	உ	நாகிலத்	நா[illegible]ிலத்
உஎ	ஙங	ங	ஞவினி	ந[illegible]வினி
உஅ	ஙஅ	க	பேதயை	பேதையை
உகூ	சரு	உ	விளைத்திழி	விழைத்திழி
ஙசா	க00	க	யைவரென்	யைவரென
,,	க0ரு	க	சேர்ந்து	சோர்ந்து
ச0	கஙக	ரு	தரிசிததானே	தெரிசித்தானே
சக	கஙகூ	ங	பெருக்கனற்	பெருக்கநற்
,,	கசக	ங	திரி	கிரி
சஉ	கசரு	ச	மே[illegible]	மேயென
,,	கசஎ	க	கிடையூ[illegible]	கிடையூறு
சங	கரு0	க	னெய்து	னை[illegible]
,,	கருரு	ச	கண்ணுத[illegible]	கண்ணு[illegible]
சச	கருசா	க	பரி[illegible]ன	பரிவெ[illegible]
சரு	கசாசா	ங	தண்[illegible]மெ[illegible]ப்	தண்டமெ[illegible]
சசா	கஎரு	க	கல்[illegible]	க[illegible]
[illegible]	கஅக	ங	றெ[illegible]	[illegible]
சஅ	கஅஅ	ங	யு[illegible]டாய்	[illegible]
ருஉ	உசா	ச	சு[illegible]	சு[illegible]

பிழைதிருத்தம்.

பக்கம்		வரி.	பிழை.	திருத்தம்.
௫௨	௨	[illegible]	ணெழுந்து	னெழுந்து
௫௪	௩௯		துளதால்	துளவால்
௫௫	௫0	௩	ஞெமினி	ஞெமினி
௫௬	௫௯	௧	மாதர்பல	மாதர்பலர்
௫௮	௭௨	௪	தெழுந்தற்ற	தெழுமற்ற
௯௧	௯௪	௩	றுசிதமாய்ச்	றுசிதமாக
௬௮	௪௧	௩	கண்ணிரா.	கண்ணினை.
௭0	௫௮	௧	துபய	துபயக்
௮[illegible]	௮0	௪	விட்டைவ	விடடைவ
௮௫	௨௧	௧	சன்மம்	சனமம்
௮௭	௨௯	௨	டியுத்தற்	டியுத்தற்
௮௮	-௧	௩	தெறும்	தேறும்
௯௬	௧௨	௧	கொண்டமிறங்	கொண்டனிற[illegible]

☞ கடவுள்வாழ்த்து ௯-ம் பக்கத்தில் சண்டேசுரர் திருஞானசம்பந்தநாயனார் என்பவற்றை முறையே சண்டேசுரர் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் எனவாசிக்க.